# தென்றல்

புதிவு இலக்கம் : 361910

காற்று : 03 சுகந்தம் : 02 (ஆடி - புரட்டாதி) - 2010



65/=

தேசிய பல்சுவை குடும்ப சஞ்சிகை!

Life's Good LG


# Abans

## Show Room

**NIMBUS**
**NEW NIMBUS RANGE**
**GREEN ION**
**DOOR COOLING**



- டிவிடி இயந்திரம்
- கணனி இயந்திரம்
- சலவை இயந்திரம்
- மோட்டார் சைக்கிள்
- ஜெனரேட்டர்







<u>தொடர்புகளுக்கு</u>

**263,265, Trinco Road,**
**Batticaloa**
**T.P/Fax. 065-2227895**

AD/0020

K. Bharameetharan
EDITOR
"JEEVANATHY"
KALALAHAM

# தென்றல்
# THENDRAL

34/1, பழைய கல்முனை வீதி,
கல்லடி, மட்டக்களப்பு
தொ.பே : 077 - 6983597

**ஆசிரியர்**
க. கிருபாகரன்

**ஆசிரியர் குழு**
திருமதி.சிறிதேவி சங்கர்
திரு.கே.வாமதேவன்
திருமதி.கவிதா.கிருபாகரன்
திரு.ஆ.அரசரெத்தினம்

**ஆலோசகர்**
இரா. நாகலிங்கம்
(அன்புமணி)

**ஓவியம்**
சி.டானியல்

**கணனி வடிவமைப்பு**
அ.ஜெயலக்ஸ்மி

**அட்டை வடிவமைப்பு**
எஸ். கிறிஸ்டி

## சிற்றேடுகளுக்கு கௌரவம்!

ஒரு பிரதேசத்தின் அடையாளச் சின்னங்களை-நிகழ்வுகளை அப்பிரதேசத்திலிருந்து வெளிவரும் சஞ்சிகைகளே பெருமளவில் வெளிக் கொணர்கின்றன.

இந்த வகையில் பல்வேறு பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும், பிரதேச மக்களின் நலனுக்காக பணியாற்றும் சஞ்சிகைகளை மதித்து, கௌரவப்படுத்தும் பண்பு எம்மிடையே இன்னும் தலை தூக்காமை மன வேதனை தரும் விடயம் எனலாம்.

இவ் வேளையில் தமது நலனை நோக்காக கொள்ளாது, சமுக நலனுக்காக உழைக்கும் சிற்றிதழ்களை அவர்கள் ஏன் எண்ணிப்பார்க்க மறுக்கின்றனர்?

ஒவ்வொரு பிரதேச செயலகங்களும் வருடாவருடம் முத்தமிழ் விழாவின் போது பல்வேறு துறைகளிலும் பிரதேச அபிவிருத்திக்காக உழைத்தவர்களை இனங்கண்டு கௌரவித்து வருகின்றன.

இதே போன்று மாவட்ட கலாசார விழா, மாகாண கலாசார விழா மற்றும் தேசிய விழா ஏற்பாட்டாளர்கள் கூட ஏறெடுத்தும் பார்ப்பதில்லை.

இந்த 21ஆம் நூற்றாண்டில் பல்வேறு அளப்பரிய பங்களிப்பை பிரதேச, தேசிய நலனை மையப்படுத்தி வழங்கி வெளிவரும் சிற்றிதழ்களுக்கு விருது கொடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படுவதன் ஊடாக எதிர் காலத்தில் சிற்றிதழ்களின் வருகை தொடர்ந்து பிரகாசம் மிக்கதாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை!

**என்றென்றும் அன்புடன்**
**-ஆசிரியர்-**

## தென்றல் கட்டண விபரம் (அஞ்சல் செலவு உட்பட)

| | இலங்கை | வெளிநாடு |
|---|---|---|
| ஓராண்டு கட்டணம் | 300/= | US$10 |
| ஆயுள் கட்டணம் | 4000/= | US$ 50 |

ஆயுள் கட்டணம் செலுத்துவோருக்கு வாழ்நாள் முழுவதும் "தென்றல்" இலவசமாக வழங்கப்படும்.

## விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பின்அட்டை வெளிப்புறம் | 2000/= | 1000/= |
| முன் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| பின் அட்டை உட்புறம் | 1500/= | 750/= |
| உட்பகுதிகள் | 1000/= | 500/= |

## அன்பளிப்பு

அன்பளிப்புச் செய்ய விரும்பும் நலன்விரும்பிகள் தாங்கள் விரும்பும் தொகையை ஆசிரியரிடம் வழங்கலாம்.

வங்கி : மக்கள் வங்கி (நகரக்கிளை) மட்டக்களப்பு.
கணக்கு இல : 113100170002181
(நடைமுறைக்கணக்கு)
காசுக்கட்டளை : அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பு.

# மட்டக்களப்பு மக்களும் மரபுசார் சடங்கிசை வடிவங்களும்

திருமதி.பிரியதர்ஷினி ஜெகதீஸ்வரன்
விரிவுரையாளர்
சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்

இலங்கையின் கிழக்கே அமைந்துள்ள மட்டக்களப்புப் பிரதேசம் இசைக் கலைக்குக் காத்திரமான பங்களிப்பைச் செய்து வந்துள்ளது என்பதனை வரலாற்று ரீதியான ஆதாரங்கள் மூலம் அறியக்கிடைக்கிறது. **"மீன்பாடும் தேனாடு"** என்று அனைவரும் இசையுடன் இணைந்து பார்க்கும் நிலையில் இருப்பதுவும் இங்கு இசைக்கான முக்கிய இடத்தினை விளக்குவதாகவே உள்ளது. இப்பிரதேசத்தின் இயற்கை எழிலும், அது தருகின்ற அமைதிச் சூழலும், இங்கு வாழ்கின்ற மக்களுக்குப் புத்துணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றன. இங்கு வாழ்ந்த மக்கள் பண்பாட்டு அம்சங்களில் முக்கிய கவனம் செலுத்துபவர்களாகவும் பண்பாட்டினைப் பேணிப் பாதுகாக்கும் கடப்பாடுடையவர்களாகவும் வாழ்ந்து வந்திருக்கின்றனர். இவர்கள் தம் பிரதேசத்தின் கலை, கலாசார விழுமியங்களை பேணுபவர்களாகவும், வளர்த்தெடுப்பவர்களாகவும் இருந்து வந்திருக்கின்றனர்.

இங்கு வாழ்ந்த சமூகம் பல இன மக்களின் கூட்டு வாழ்க்கையோடு இணைந்ததாக இருக்கின்றமையினால்



பண்பாட்டு அடிப்படையில் குறிப்பிடத்தக்க தனித்துவ அம்சங்களையும் கொண்டு விளங்குகின்றன. ஆதியிலே குழுக்களாக வாழ்ந்த மக்கள் இங்கு அவர்கள் செய்யும் தொழில்களை அடிப்படையாக வைத்து சாதிப்பகுப்புகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். மேலும் பகுப்பினுள்

**"குடிகள்"** என்ற பிரிவும் குறிப்பிடத்தக்க அம்சத்தினை வகித்து வந்திருக்கின்றது. ஒவ்வொரு சாதியினரும் ஏழுகுடிகளாக பிரிக்கப்பட்டிருந்தனர். இந்நிலைமை இங்கு வாழ்கின்ற தமிழர் மத்தியில் இன்று வரை தொடர்கின்றது.

இங்கு வாழ்கின்ற முஸ்லிம் மக்கள் இனரீதியாக வேறுபட்டிருப்பினும் - இங்கு வாழ்கின்ற தமிழ் மக்களின் வாழ்க்கைப் பின்னணியோடு பின்னிப் பிணைக்கப்பட்டிருப்பதால் தமிழ் மக்களின் பண்பாட்டின் சாயல் சிலவற்றை உள் வாங்கிச் செயற்படுகின்றதை காணக்கூடியதாக உள்ளது. கலை வெளிப்பாட்டினைப் பொறுத்த மட்டில் கணிசமான அளவு பங்களிப்பினை முஸ்லிம் சமூகத்தினர் ஆற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு வாழ் பறங்கியின மக்களின் தனித்துவமான கலாசார பண்பாட்டம்சங்கள் மட்டக்களப்பின் கலாசாரக் கட்டமைப்பில் சிறிதளவு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இவர்கள் தமிழர்களாக வாழ்கின்ற போதும் மத வழிபாட்டில் தம்மை கிறிஸ்தவ மதத்துடன் இணைத்துக் கொண்டுள்ளனர். இனரீதியில் பறங்கியர் எனப்பட்டபோதும் தமிழ் மக்கள் பேசும் மொழி நடையினைக் கொண்டவர்களாக விளங்குகின்றனர். ஆனால் இவர்களது கலாசார செயற்பாடுகள் மேலைத்தேய நாகரீகத்தைத் தழுவியதாகவே உள்ளது.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் சிங்கள மக்கள் கடந்த எழுபதுகள் வரை ஆங்காங்கு வாழ்ந்திருக்கின்றார்கள். ஆனால் பண்டைய மட்டக்களப்புப் பிரதேசம் முழுவதும் தமிழ் மக்களே வாழ்ந்ததற்கான ஆதாரங்களை கல் வெட்டுக்களினூடாக அறிந்து கொள்ள முடிகின்றது. ஆங்காங்கே இப்பிரதேசங்களில் வாழ்ந்து வந்த சிங்களக் குடிகள் கடந்த இருதசாப்தங்களாக நடைபெற்று வந்த இன முரண்பாடுகளாலும், போர்ச் சூழல்களாலும் இருப் பொழிந்து விட்டது.

பொதுவாக பல்லின மக்களின் கூட்டமைப்பான மட்டக்களப்பு சமூகத்தினரிடம் பல்வகையான இசை முறைகள் வழங்கப்படுவதை அவதானிக்கலாம். பெருமளவு தமிழ் மக்கள் வாழும் இப் பிரதேசத்தில் இந்துமதமே அதிகளவில் பின்பற்றப்படுகின்றது. முஸ்லிம் மக்கள் இஸ்லாம் மதத்தினையும் ஏனைய ஒரு பகுதி தமிழரும் கிறிஸ்தவ மதத்தினையே பின்பற்றுகின்றனர்.

இப்பிரதேச கலை, பண்பாட்டம்சங்களும் மதத்தாக்கத்திற்குட்பட்டே காணப்படுகின்றன. பொதுவாக இக்கலைகளை கோயில் சார்ந்தவை எனவும், கோயில் சாராதவை எனவும் இரு பிரிவாக எடுத்து நோக்கப்படுகின்றன. ஒவ்வொரு மத்தினருக்கும் இது பொருந்தும். கோயில் சாராத கலைகள் சாதாரண வாழ்க்கையில் அனைத்து சந்தர்ப்பங்களிலும் இடம்பெறுகின்றன.

இசை அம்சங்களை பார்க்கும் போது தமிழர் வாழ்வில் பல்வேறுபட்ட சடங்குகளிலும், வழிபாட்டு நிகழ்வுகளிலும் பின்னிப்பிணைந்து காணப் படுகின்றன. இசை கேட்காத நிகழ்வுகளே இல்லை என்னுமளவிற்கு முக்கியத் துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது. மேலும் மட்டக்களப்பு மக்கள் வாழ் வியலில் மண்சார்ந்த இசை அம்சங்கள் மலிந்து காணப்படுகின்றன. இம் மக்களின் பாரம்பரிய இசை வடிவங்கள ளாக இவை இன்றும் போற்றி வளர்க் கப்படுகின்றன.

மட்டக்களப்பு சமூகத்தை ஆராய வேண்டுமாயின் நாட்டாரியல் பண்புகளை ஆய்வு செய்யும் போது புரிந்து கொள்ளலாம். அந்தளவிற்கு நாட்டாரியல் பாரம்பரியதான மரபுகள் பேணப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது. எனவே தான் **"நாட்டாரியல் ஆய்வாளருக்கான தங்கச்சுரங்கம் மட்டக்களப்பு"** என பேராசிரியர் கா.சிவத் தம்பி அவர்களும், பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களும் சிறப்பாகக் கூறியிருக்கின்றனர். இக் காரணம் பற்றியே மறைந்த பேராசிரியர் சு. வித்தி யானந்தன் அவர்கள் தனது ஆய்விற் கான களமாக மட்டக்களப்பைத் தேர்ந்தெ டுத்தார். நாட்டாரியல் இசை பற்றிப் பார்க்கும்போது இது தனித்துவமான கவனிப்பிற்குரியது. இது மட்டக் களப்பின் தனிச் சிறப்பைக் கூறுகிறது. ஏனெனில் வேறு எங்கும் இல்லாத பல சிறப்பு அம்சங்களை மட்டக்களப்பு நாட்டார் இசையில் காணலாம். ஈழத்தின் பழந்தமிழகமான இம் மட்டுநகர் உணர்ச்சிக் கவிதைகள் நிறைந்த பிர தேசமாக காணப்படுகின்றது.

கவிதையில் பேசி, கவிதையில் வளர்ந்து, கவிதையில் வாழ்ந்த பரம் பரையில் வந்த தமிழ்மக்கள் இங்கு வாழ்ந்திருக்கிறார்கள். இம்மக்களி டையே வழக்கத்திலிருக்கும் கூத்து வகைகளும், குரவைப் பாடல்களும், கண்ணகி வழிபாட்டு வழக்குகளும், குளிர்த்திப் பாடல்களும் சிலப்பதிகாரத் துடன் தொடர்புடையனவாக காணப்ப டுகின்றன. சிலப்பதிகார நடையை ஒட்டி எழுந்த **"கண்ணகி வழக்குரை"** ஏட்டுப் பிரதியாகவே இங்கு கிடைக்கும் ஓர் கண்ணகி வரலாற்று நூலாகும்.

**கூத்தும், கூத்திசையும்:-**

நாட்டுக்கூத்து என வழங்கப் பட்டுவரும் கூத்துக்கள் பன்நெடுங் காலம் தொட்டு இப்பிரதேசத்தில் ஆடப்பட்டு வருகின்றன. கூத்து என்பது ஆடலும், பாடலும் சேர்ந்தது. சமயச் சடங்கு களிடையாகத் தோன்றிய இக்கூத்து தாள அமைதி உணர்ச்சி பாவங்களிற்கேற்ப இசை அமைப்பு என்பவற்றுடன் இணைந்து வெளிப்படுத்தப்படுவது நாகரீக வளர்ச்சியால் அதிகமாக பாதிக்கப்படாத மட்டக் களப்பில் பாரம்பரிய பிரதேசங்களில் பொதுமக்கள் கலை

யாகிய இக்கூத்து மரபு இன்றுவரை நிலைத்திருப்பதில் வியப்பேதுமில்லை.

மட்டக்களப்புக் கூத்துக்கள் பற்றி கூறிய அனைவரும் தென்மோடி, வடமோடி கூத்து வகைகளைக் குறிப்பிட்டுச் சொல்வர். இக்கூத்துக்கள் ஒரு நாட்டுக்கென அமைந்தன அல்ல. எனினும் மட்டக்களப்பு பிரதேசத்தில் ஆடப்பட்டு வரும் கூத்துக்கள் தனித்துவம் வாய்ந்தவை. இங்கு பெருவழக்காக நடக்கும் கூத்துக்களான வடமோடி, தென்மோடி என்ற இரண்டிற்குமி டையே பெரிதும் வேறுபாடுகளை காணமுடிகிறது. இவை கதைப் போக்கு, தாளக்கட்டு, ஆடல், பாடும்முறை, உடை, ஒப்பனை என்பவற்றில் தனித்துவங்களை வெளிப்படுத்தி நிற்கின்றன.

தென்மோடியில் வடமோடியினைப் பார்க்க அரிய நுணுக்கமும், கடினமுமான ஆட்டங்களும் உள்ளன. தென்மோடி வரவுக்குரிய ஆட்டங்களை முடித்துப் பாட்டும் படிக்க வேண்டிய கட்டத்திற்கு வரும்போது கூத்துக்காரர் களைப்படைந்து விடுவார்கள். வடமோடி ஆட்டம் இப்படி உடம்பை அதிகம் முறிக்காது வரவு ஆட்டத்தின் பின் தம் வரவை குறிக்கும்பாடலை தாமே பாடி ஆடுவர். வடமோடியார் தம்விருத்தங்களை அதிகம் நீட்டி இசைக்காது படிப்பதும் தென்மோடியார் அவற்றை நீண்ட ஓசை புலப்பட இழுத்துப் பாடுவதும் வழக்கம். வடமோடியில் கூத்தர் ஒரு பாட்டைப் படித்தால் பக்கப்பாட்டுக்காரனும் அதனைத் தொடர்ந்து படிப்பர். தென்மோடியிலோ பாட்டை நடிகர் படிக்க அதன் கடைசிப்பாகத்தை மட்டும் பின்பாட்டுக்காரர் தொடர்ந்து படித்து விட்டு பாட்டு முழுவதற்குமுரிய தருவை படிப்பார்கள். பாட்டுக்கு அமைக்கப்படும் ஸ்வர கோர்வை போன்று கூத்து பாட்டுக்களைப்பாடும் முறையை அமைத்துக் காட்டும் ஒருவித சொற்கோர்வை **"தரு"** என்பபடும்.

கூத்திற்கு மிக முக்கியமான உயிர்நாடி தாளக்கட்டாகும். பக்கப்பாட்டுக்காரரும் அண்ணாவியாரும் சொல்லும் தாளக்கட்டினை சொன்னவாறே மத்தளமும் தன்மொழியில் சொல்கிறது. மத்தளத்தின் இந்த சிறப்பு நிலையை மக்கள் **"மத்தளம் நன்கு பேசுகிறது"** என்று சொல்லி மகிழ்கின்றனர்.

## மகிடிக் கூத்தும், பறைமேளக் கூத்தும் :-

தென்மோடி, வடமோடிக் கூத்துக்களுள் மகிடிக்கூத்து எனும் ஒருவகை, சமயச் சடங்கிலிருந்து விடுபட்ட நாடகம் இங்கு காணப்படுகின்றது. இது சமய சடங்கிலிருந்து விடுபட்டாலும், மட்டக்களப்பில் இந்து மத சமய சடங்குகளில் பயன்படுத்தப்படும் வணக்க முறைகள், கிரியை முறைகள், தாள வாத்தியங்கள் பயன்படுத்துவதுமான ஒரு நாடகமாகும். இவ்வகையில் இது

பெருவளர்ச்சி பெற்ற வடமோடி, தென் மோடிக் கூத்துக்களுக்கும், சமயச் சடங்கு களுக்கும் இடைப்பட்ட ஒரு நாடகவடிவ மாகும். இதே போல மைத்த சொக்கரி எனும் நாடகவடிவம் சிங்களவர் மத்தியில் உண்டு.

மகிடி என்பதற்கு மந்திர தந்திரங்களைக் காட்டும் விளையாட்டு என்று ஒரு அர்த்தமும் அதற்குண்டு. இம்மகிடிக் கூத்தில் பெரும் இடத்தைப் பிடிப்பதும் அதுவே. மட்டக்களப்பு மந்திர தந்திரங்களுக்கு பேர்போனது என்ற கருத்தும் உள்ளதால், அப்பண்பு மகிடிக் கூத்தில் பிரதிபலிக்கின்றது எனலாம்.

மூன்றுவகை மகிடிக்கூத்துக் கள் மட்டக்களப்பில் ஆடப்படுகின்றன. முதலாவதான மகிடிக் கூத்தில் மலை யாள நாட்டிலிருந்து வரும் ஒண்டிப் புலியும், அவன் மனைவி காமாட்சியும் தமது கூட்டத்தாருடன் மட்டக்களப்புக்கு வந்து அங்கு வாழ்ந்த மந்திரவாதியுடன் போட்டியிட்டு அப்பிரதேசத்தில் குடியேறி யமையை சித்தரிக்கின்றமை.

இரண்டாவது வகை மகிடிக் கூத்தில் கதை அம்சம் அதிகமில்லாம லும் இருக்கும். மந்திர வேலைகள் நடைபெறுகின்ற மகிடியினை வேடன், வேடுவிச்சி, வெள்ளைக்காரன், வெள் ளைக்காரி ஆகியோர் பார்க்க வருவது இந்த நிகழ்ச்சியில் காட்டப்படுகின்றது.

மூன்றாவது வகை மகிடிக் கூத்து முதலிரண்டு மகிடிகளை விட வேறுபட்டது. இதில் மந்திர, தந்திர விளையாட்டுக்கள் இருப்பினும் கம்ப, காமாட்சி, மீனாட்சி, வசிட்டர் ஆகியோர் சம்பந்தமான கதையும், குற்றாலக் குறவஞ்சியின் சாயல் பொருந்திய குறவன், குறத்தி கதையும் நிகழ்ச்சியில் காட்டப்படும். இம்மகிடிக் கூத்துக்கள் திறந்த வெளியில் செவ்வக சமதள அரங்கில் பகல் வேளைகளில் நடை பெறுகின்றன. முதலிரு வகை மகிடிக் கூத்துக்களும் எழுத்து வடிவமைத்த நாடக பிரதிகள் இல்லை. மூன்றாம் வகை மகிடிக் கூத்துக்கு எழுத்துரு உண்டு. இதன் மேடை அமைப்பு கூட முன்னைய இரண்டிலுமிருந்து வேறுபட் டது.

தென்மோடி, வடமோடி கூத்துக் கள் செல்வாக்கு பெற்றிருந்த பிரதேசத்தில் வாழ்ந்த பறைமேளம் அடிக்கும் வகுப்பினருக்கு உயர் வகுப்பினால் இணக்கத்துடன் ஒரு புலவர் மகிடிக் கூத்தை நாடகமாக்கிக் கொடுத்திருக்க லாம் என நாம் ஊகிக்க கூடியதாகவுள்ள **தென்மோடி, வடமோடி கூத்துக்கள் மட்டக்களப்பிற்கு வந்த போது அவரை சமூகத்தில் உயர் வகுப்பி னர் தமதாக்கிக் கொள்ள செல்வாக்கி ழந்த மகிடிக் கூத்தினை குறைந்த வகுப்பினர் தமதாக்கியிருக்கக் கூடும். எவ்வாறாயினும் மகிடிக் கூத்து இன்று மட்டக்களப்பின் உயர் வகுப்பினர் மத்தியில் செல்வாக்கு**

**பெற்ற கூத்தொன்று** என்பது மனம் கொள்ளத் தக்கதோர் அம்சமாகும்.

பறைமேளம் அடிக்கும் வகுப்பினரால் மாத்திரமே பறைமேளக்கூத்து ஆடப்படுகின்றது. வேடம் ஆணிந்த இருவர் தமது பறைகளை அடித்து, பல்வேறு தாளப்பறைக்கு ஏற்ப தமது உடலை அசைத்து ஆடுவதே இக்கூத்தாகும். கோயிலின் வெளி வீதியில் சமதள அரங்கில் மக்கள் சூழ்ந்திருக்க இக்கூத்து நடைபெறும். இக்கூத்து பறை சொர்ணாளி என்ற இசைக் கருவிகளில் மீட்பொலியுடன் ஆடப்படுகின்றது. இது தவில், நாதஸ்வரம் இணைந்து வாசிப்பது போன்ற மற்றுமோர் அம்சமாகும். ஒருவர் பல மணித்தியாலங்களாக பறைமேளத்தினை அடித்து வாசிப்பதோடு அதன் ஒலி அமைதிக்கேற்ப சொர்ணாளி இசையும் இணைய ஆட்டக்காரர் ஆடுவர். மேலும் பறைமேளத்திற்கு மிகையான இசையாக சொர்ணாளி விளங்குகிறது.

இவ்வாறு ஆடப்படுகின்ற பறைமேளக்கூத்து மட்டக்களப்பு பிரதேசத்தில் தனித்துவமான அம்சங்களுடன் ஆடப்படுகின்றன. சில தாள, இசைகள் ஒன்றுக்கொன்று ஒற்றுமையாகவும் இன்னும் சில தனித்துவமாகவும் தொழில்படுவதை வாத்தியம் இசைக்கப்படும் போது அவதானிக்கக் கூடியதாக இருக்கும். இதில் சிலதாள வகைகளை வரையறை செய்யமுடியாது இருப்பது தவிர்க்க முடியாததேயாகும். மங்கலகரமான நிகழ்வில் **"டாங்கிடுச் சிட்டணம் கெயிட்டுக்கோட்டாம் டாங்குச் சோட்டாம்.... டாங்குச் சோட்டாம்"** எனும் அரட்டு தாள வடிவங்களில் வாசிக்கப்படும் முறையும் இங்கு காணப்படுகிறது. இது அடியார்களை வரவழைக்கின்ற தாளமாக இடம்பெறுகின்றது.

ஆலயங்களில் இடம்பெறுகின்ற வாசிப்பின் வகையாக ஆலய அபிஷேக அமைப்பு சுற்றுலா தாளம், பெரிய பூஜைதாளம் என்பன இடம்பெறுகின்றன. மரணக்கிரியைகளில் ஆரம்ப தாளம் திரியப்படுத்தும் எடுத்துச் சொல்லும். சந்தி, கூடு என்பன இடம்பெறுபவை ஆடம்பர நிகழ்வுகளில் வாசிக்கப்படுபவையே.

அரங்கிலே இராசவரவு, மந்திரி வரவு, கோணங்கிவரவு என அவர்களுக்குரிய வரவு தாளங்களைப் பறையில் எழுப்பி அவ்வோசைக்குத் தக்க ஆடுவர். இடையில் வரபுக்கோணங்கி, தைதா, பல்லாக்கு, நாலடி தாளம், ஆறடி தாளம், எட்டடிபட்டுத்தாளம், தட்டுமாறும் தாளம் என்பன சிறந்த இசை வெளிப்பாடுகளுக்கு இடமளிக்கின்றன.

## வசந்தன் கூத்தும், கொம்பு முறிப் பாடல்களும் :-

வசந்தன் கூத்து என்னும் ஆட்டமும், கலையாடல் என்னும் ஆட்டமும் கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புடையதாக காணப்படுகின்றது. பன்னிருவர் வட்டமாய் நின்று கோல் கொண்டு

தாள அமைதி பிசகாது ஆடும் ஆட்டம் வசந்தன் ஆடல் இவ்வாடல் சமயக் காரணங்களுடன் சம்பந்தப்பட்டது. ஊரிலே மழை பெய்யாதபோது வடசேரி, தென்சேரி என இரண்டாகப் பிரித்து கொம்பு முறிப்பார்கள். இதில் வெற்றி கொண்டோர் இக்கூத்தினை ஆடி மகிழ்வர். கண்ணகி தணியாது கோபம் கொண்டு வருகையில் அவளை மகிழ் விக்க சிறுவர்கள் ஆடிய கூத்து இது என ஓர் ஐதீகம் உண்டு. கண்ணகி அம்மன் குளிர்த்தி நாட்களில் இது ஆடப்படுகின் றது.

வசந்தன் கூத்திலே கதை என்பது பெரிதாக இல்லை, ஆனாலும் ஆடலும், பாடலும் மிகையாக உண்டு. விடிய விடிய நடைபெறும் இக்கூத்தில் மத்தளமும் சல்லரிப்புமே பக்க வாத்தியங் களாகும். தாளம், இராகம் என்பன தென்மோடிக் கூத்து வகையினைச் சேர்ந்தவை. ஆடல்களின் செயலினால் பாடல்கள் பெயர் பெறுகின்றன. வேளாண்மை வெட்டு வசந்தன், பிள்ளையார் வசந்தன், முயிற்று வசந்தன், அம்மன் பள்ளு வசந்தன் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

## சடங்கும், இசையும்:-

மட்டக்களப்பு மக்களிடையே பன்நெடுங்காலமாக வழக்கிலிருக்கும் கண்ணகியம்மன் வழிபாடானது வருடந் தோறும் மிகுந்த பக்திப் பெருக்கோடு வைகாசி மாத வளர்மதி நாட்களில் நடத்தப்படும் சடங்காக கொண்டாடப் படுகிறது. ஆண்டு முழுவதும் பூட்டப் பெற்றுக் கிடக்கும் கண்ணகி கோயிலெல் லாம் வைகாசி மாதம் பிறந்து விட்டதும் பூசையினையொட்டி குறிப்பிட்ட சில நாட்களின் முன்னர் திறக்கப்பட்டு விடும். இவ் விழா **"கதவுதிறத்தல்"** என்ற பெயராலே அழைக்கப்பெற்று, அதனை தொடர்ந்து சடங்குகள் இடம்பெறும். பூசைகளில் தெய்வம் ஏறியோர் உரு வேறப்பெற்று ஆடுதல், உடுக்கு, சிந்து என்பன பாடுதல் அம்மானைகாய், குரவை, ஆலத்தி அனைத்து நிகழ்ச்சி களும் சடங்கு எனும் சொல்லுள் அடங் கப்பெறும். இதனை நிகழ்த்துபவர் பூசாரியார் என அழைக்கப்படுவார்.

இவர் உரு மாறி ஆடுபவர் காதருகே இனிய ஒலி எழுப்ப உடுக் கினை பல நடைகளில் ஒலிக்கச் செய் வார். பாடல்களையும் அதன் இசை வாகப் பாடுவார். இக்காலங்களில் அம்மன் காவியம், கும்மிப்பாடல்கள், கரகப்பாடல் கள் என்பவற்றை காதினிக்கப் பருகலாம்.


**கரகப் பாடல்கள் :-**

மட்டக்களப்பு மக்களிடையே பிரபல்ய மாக விளங்கும் இசையும், நடனமும் சேர்ந்து விளங்கும் ஓர் கிராமிய கலை வடிவம் கரகமாகும். ஒவ்வொரு கிராமத் திலும் மிக்க பயத்தோடும், பக்தியோடும் தாய்க்கடவுளான மாரியம்மனை வணங்கி விழாக் காலங்களிலும் பஞ்சம் வந்தபோதும், கொள்ளை நோய் வந்த

போதும் மக்கள் தங்கள் இதயங்களுக்கு நெருங்கி தன் இறைவனை வேண்டி இங்கு கரக நடனத்தை ஆடி வழிபாடு நடத்துவார்கள். கரகம் என்பது நடுத்தர அளவிலான அலங்காரம் செய்யப்பட்ட ஒரு அழகிய மகுடமாகும். அதனை அதற்கேற்ப அணி மணிகளை அலங் கரிப்பார்கள். குடத்தினுள் அரிசி நிரப்பப் பட்டிருக்கும். மக்கள் அதனுள் கலந்தி ருக்கும் இக்குடத்தை தலையில் வைத்து கரகமாடுவர். இதனைப்பெரும் பாலும் பெண்களே இங்கு ஆடுவர். வயல் வெட்டு காலங்களில் **புதிர் அரிசியை குடத்தினுள் போட்டு கரகம் எடுத்து நெல்வயல் பொழிய வேண்டி பெண் கள் இங்கு கரகமாடுவதுமுண்டு.**

மேளமும், சூழலும் ஒலிக்க இவர்கள் சல்லரியை தட்டி பாடுவார்கள். பாடலுக்கேற்ற இலாவகத்துடன் தலையி லுள்ள குடம் நழுவாது, திறமையாக சுற்றிச் சுழன்று ஆடுவர். இங்கு கைகளுக்கும், கால்களுக்கும் தான் வேலை அதிகம். செம்பிற்கும், தலைக் கும் இடையில் வேப்பிலைக் கொத்துக் களை வைப்பர். கைகள் இரண்டிலும் வேப்பிலைக் கொத்துக்களைப் பிடித்துக் கொண்டு ஆடுவார்கள். பெண்கள் கூடிநின்று கைகொட்டி பாடி, ஆடி மகிழ் வது கும்மியாகும். சுவையான இப்பாடல் கள் நல்ல தாளக்கட்டுடன் அமைந்திருக் கும். குனிந்து, வளைந்து உட்கார்ந்த நிலையில் கைகொட்டி, கும்மியடித்து இளம்பெண்கள் ஆடிமகிழ்வது கண் கொள்ளாக்காட்சியாகும்.

பத்தினி தெய்வமன்றி பேச்சியம் மன், திரௌபதை அம்மன், கடல்நாச்சி அம்மன், காளியம்மன் போன்ற பெண் தெய்வ வழிபாட்டு பாடல்கள் மட்டுமன்றி வீரபத்திரர், வைரவர், குமாரதெய்வம், வதனமார் போன்ற ஆண் தெய்வங் களும் சடங்குகள் செய்வது இங்கு மரபாக காணப்படுகின்றது. இதன்போது பாடப்படும் பாடல்களும் பிரத்தியேகமா னவை. இவைமட்டுமன்றி காவடிப்பாடல் கள், அலகு ஏற்றும்போது பாடப்படும் பாடல்கள் என மட்டக்களப்பு மண்ணில் தெய்வ வழிபாட்டு பாடல்கள் நிறைந்து காணப்படுகின்றன. மரபுக்கலைகள் பலவற்றையும் தன்னகத்தே கொண் டுள்ள கலைவளம் மிக்க மட்டக்களப்பு மண் சடங்கிலும், மரபு இசையிலும் மாறுபடாது பேணிப்பாதுகாக்கும் போக் கினை கொண்டுள்ளது மகிழ்ச்சிக் குரியது.



# சித்த மருத்துவமும், மனோசக்தியும், மந்திர சக்தியும்

டாக்டர். ஸ்ரீராமநாதன் கலைவாணன்

மனம் என்பது என்ன? அது மனித உடலினுள்ளே எங்கே இருக்கிறது? அது இருப்பது இதயத்திலா? மூளையிலா? மனம் மனிதனுக்குள்ளே எந்த வடிவில் இருக்கின்றது? எந்த அளவில் இருக்கின்றது? எப்படி இயங்குகின்றது? இவற்றைப் பற்றிய எந்த விதமான பதிலையும் இன்றும் எத்தகைய விஞ்ஞானிகளினாலும் உறுதியாக கூறிக் கொள்ள முடியாத நிலையில், மனித உடலினுள்ளே மனம் என்ற ஒன்று இருப்பதைப் பற்றி ஒப்புக்கொள்கின்றனர். தோன்றிய பொருட்கள் யாவுமே நிலையானவையல்ல. இந்த உண்மையை இதைப் பற்றிய அறிவை நமக்கு வழங்கியது மெஞ்ஞானமாகும். ஆனால் மனித மனமோ தோன்றியவை யாவும் நிலையானவை, அழியாதவை என்று நினைக்கும் படி செய்யும் வல்லமை உடையது. அது மனிதனுக்கு அவனது உடலின் மீதும், உயிரின் மீதும், உலகத்தின் மீதும், வாழ்க்கையின் மீதும் நம்பிக்கையை ஏற்படுத்தி அவனுக்கு ஊக்கமூட்டி, உற்சாகமூட்டி உயர்வளிக்கின்றது. அதனால் தான் மனிதன் தன் அறிவையே மயக்கக் கூடிய மனத்தின் சக்தியையே மகத்தான ஒரு சக்தியாகக் கருதலானான்.

சுவாமி விவேகானந்தர் ஒரு முறை ஹைதராபாத் நகருக்குச் சென்றிருந்தார். அங்கு ஓர் அந்தணர் அற்புதம் நிகழ்த்துவதைக் கேள்விப்பட்டு அவரிடம் சென்றார். அற்புதம் செய்தவர் ஒரு வியாபாரி பலராலும் மதிக்கப்பட்டவர். அவருக்குத் தெரிந்த வேடிக்கையைச் செய்து காட்டும்படி விவேகானந்தர் கேட்டார். அற்புதம் செய்பவர் நீங்கள் உங்களுக்குத் தேவையான பொருட்களை ஒவ்வொரு துண்டுக் காகிதத்தில் எழுதிக் கொடுங்கள் என்றார். விவேகானந்தரும் மற்றவரும் வாழைப்பழம், திராட்சை போன்றவற்றை எழுதி அவரிடம் கொடுத்தார்கள்.

சிறிது நேரத்தில் திராட்சைப் பழங்களையும், வாழைப்பழங்களையும் அவர் வாரி வழங்கிக் கொண்டிருந்தனர். விவேகானந்தர் வியப்படைந்தவர்களைப் பார்த்து வியப்படையாதீர்கள். இது தான் இராஜயோகக் கலை இதனை யாரும் ஒழுங்கு முறையுடன் பயின்று பயிற்சி செய்தால், எல்லோரும் இச் சக்தியைப் பெறலாம் என்று விளக்கினார்.

அந்த அந்தணரின் சக்தியை என்னவென்று கருதுவது. அத்தகைய

சக்திக்குப் பெயர்தான் மந்திரசக்தி என்று கூறலாம். மேற் சொன்ன அற்புதம் செய்யும் வல்லமையைப் பெற்ற அந்த அந்தணரைக் காண சுவாமி விவேகானந்தர் மீண்டும் ஒரு முறை சென்றிருந்தார். அச்சமயத்தில் அந்த அந்தணருக்குக் காய்ச்சல் ஏற்பட்டிருந்தது. அந்தக் காய்ச்சலை அவர் தமது மந்திரசக்தியால் குணப் படுத்திக்கொள்ள முடியவில்லை. அவர் சுவாமி விவேகானந்தரை நோக்கி சுவாமி என் தலைமேல் தங்கள் திருக்கரத்தை வையுங்கள். **"எனது உடல் துன்பம் முதலில் நீங்கட்டும்"** என்று வேண்டிக்கொண்டார். சுவாமியும் அவ்வாறே செய்தார். உடனே அவர் காய்ச்சலும் நீங்கியது.

இத்தகைய சக்தி சுவாமி விவேகானந்தரைப் போன்ற ஆன்மீக சக்தி கொண்ட யோகிகள், சித்தர்களிடந் தான் இருக்கமுடியும். இந்த விடயத்திலிருந்து ஒன்றை அறியக்கூடியதாக உள்ளது. அது என்னவெனில் இத்தகைய மந்திரஜாலங்களினால் வாழ்க்கையில் மனிதன் அடைய வேண்டிய நலன்கள், வசதிகள், செல்வங்கள், பதவி உயர்வுகள், கௌரவங்கள், சொத்துக்கள், புகழ், பெருமை ஆகியவற்றை அடைவதற்கும் பயன்படுவதில்லை. தேள், பாம்பு கொட்டி விட்டால் அதற்கு வைத்தியம் செய்யாமலே மந்திரத்தினால் அவ் விஷத்தினை நீக்கி விடுவதை பலரும் அறிந்திருப்பீர்கள் இது ஒரு ஏமாற்று வித்தை அல்ல. விஷ வேதனையால் தவிக்கும் நோயாளி மந்திரித்து சில நிமிடங்களிலேயே குணம் பெற்று விடுகின்றார் என்றால் அது எப்படி ஓர் ஏமாற்று வித்தையாக இருக்கமுடியும்.

மந்திர ஔஷதங்களில் வல்ல சித்தர்களால் உருவாக்கப்பட்ட மருத்துவம் தான் சித்தவைத்தியமாகும். அவர்கள் அட்டமா சித்துக்களை செய்யும் வல்லவர்களாகவும் விளங்கினார்கள். தேள், பாம்பு ஆகிய கொடிய நஞ்சுள்ள பிராணிகள் கடிப்பதால் ஏற்படும் விஷத்தை மருந்தின்றி மந்திரத்தாலேயே நீக்கி விடும் சக்தியை மனோசக்திக்கு அளிப்பது மந்திர சக்தியே. இவ்விதமான மாந்திரீக சக்தியோடு கூடிய வைத்திய முறையானது சித்தர்களால் அருளப்பட்ட சித்த வைத்தியத்திலேயே உள்ளது.

எல்லோருக்குமே மனம் இருக்கின்றது. ஆனால் எல்லோருமே ஒரே துறையில் முன்னேறி வளர்ச்சி பெற விரும்புவதில்லை. எந்தத் துறையில் என்றாலும் எடுத்த எடுப்பிலேயே திடீரென்று முழு வெற்றியை அடைந்து விட முடியாது. தொடக்கத்தில் நிதானமாக முயல வேண்டும். பிறகு முழுச் சக்திகளையும் சேர்த்துக் கொண்டு தான் முழு வேகத்தையும் அடைய முடியும். அது போல மனோசக்தியின் விஷயத்தில் மெல்ல மெல்லத்தான் முன்னேற முடியும். அந்த முயற்சிகளை மேற்கொள்வதற்கு முன் மனத்தைப் பற்றிய அடிப்படை உண்மைகளையும் தெரிந்து கொள்ள வேண்டும். இதனை அகத்திய முனிவர் கீழே வரும் பாடல் வரிகள் மூலம் அழகாக கூறுகின்றார்.

**“மனமது செம்மையானால் மந்திரம்**
**செபிக்க வேண்டாம்.**
**மனமது செம்மையானால் வாயுவை**
**உயர்த்த வேண்டாம்.**
**மனமது செம்மையானால் வாசியை**
**நிறுத்த வேண்டாம்.**
**மனமது செம்மையானால் மந்திரம்**
**செம்மையாமே!”**

மனம் இயற்கையிலேயே செம்மையாக அமையப் பெற்றவர் மந்திரங்களைச் செபிக்க வேண்டியது இல்லை. வாசியை நிறுத்தவேண்டியதில்லை. வாயுலை உயர்த்த வேண்டியதில்லை. அவருக்கு மந்திரம் பலிக்கும். இது அகத்திய முனிவரின் கருத்தாகும். மனதில் உறுதி ஏற்பட்டால் தான் அதில் தோன்றும் எண்ணத்திலும் உறுதி ஏற்படும். உறுதி வாய்ந்த எண்ணமே செயலுக்கு வித்தாகும். இது பாரதியாரின் கருத்தாகும்.

மனித மனதிற்கு ஐந்து வகையான அவஸ்தைகள் உண்டு அவையாவன: நனவுநிலை, கனவு நிலை, சமுத்தி நிலை, துரியநிலை, துரியாநீதம் என்பனவாகும். நாம் தூங்கும் போது மன இயக்கமும், உடலியக்கமும் ஒடுங்குகின்றது. உள்மனம் மட்டுமே இயங்குகின்றது. மனித உடலுக்குப் புற அவஸ்தைகள் ஒடுங்கி விடுவதால் தூக்கத்தின்போது மனித மனதின் உள்ளியக்கங்களிலேயே வரைவும், செறிவும் நிகழ்கின்றன. அந்நிலையில் கண்கள் மூடியிருந்தாலும், மற்ற உறுப்புக்கள் ஓய்வு நிலையிலிருந்தாலும், உள் மனம் ஒன்று மட்டுமே கனவு காணும் வலிமையுடன் திகழ்கிறது. கனிவிலே நாம் காண்கின்றோம்; கேட்கின்றோம்; முகர்கின்றோம்; உணர்கின்றோம். ஆனால் மனிதனின் Sபுற உறுப்புக்களான மெய்,வாய்,கண், மூக்கு செவி எனும் ஐந்து இந்திரியங்களும் செயற்படுவதேயில்லை. ஆரோக்கியமான உடலும், மனமும் கொண்டவர்களுக்கு கனவுகள் தோன்றுவதில்லை. அவர்கள் தூங்கி விழிக்கும் போது அவர்களது உடலும், மனமும் புத்துணர்ச்சியுடனும், உற்சாகத்துடனும் இருக்கின்றான்.

மூளை ஆன்மாவோடு தொடர்புடையதாக காணப்படுகின்றது. அதுவே உடலிலுள்ள மிகநுட்பமான சக்தி நிலையமாக திகழ்கின்றது. எந்த வேளையிலும் உடலிலுள்ள எந்தப் பகுதியிலும் நொடிப்பொழுதில் சக்தியைப் பாய்ச்சி செயற்படுகின்றது. ஒருவரின் அடிப்படைக் காந்த சக்தியானது மற்றொருவரின் காந்தசக்தி அதிர்வுகளின் தாக்குதலால் விரைவிலேயே தூண்டப்பெற்று **“தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்”** என்பது தமிழ் பழமொழி. இப்பழமொழி இரத்தத் தொடர்புள்ள உறவினர், உடன் பிறந்தவரிடையே நிகழ்வதைச் சுட்டிக்காட்டும் அனுபவத் தொடராகும். உடலிலுள்ள சக்திகளின் இயக்கத்திற்கே ஆதாரமாய் இருப்பது பஞ்ச பூதங்களின் சக்தியாகும். மனித உடல் பஞ்ச பூத சேர்க்கையினால் உருவானது. உடல், உயிர் ஆகியவற்றின்

ஆதிக்கத்தினால் உயிரினங்கள் அனைத்துமே இயங்குகின்றன. உயிர் பிரிந்ததும் உடல் பஞ்ச பூதங்களோடு கலந்து விடும். இதை சித்த மருத்துவம் ஒன்றே அழகாக விளக்கியுள்ளது. சித்த மருத்துவத்தின் அடிப்படை தத்துவங்கள் 96 உள்ளது. இது சித்தர்கள் வழி வகுத்துள்ள உடலமைப்புத் தத்துவமாக உள்ளது. இந்தத் தத்துவங்களின் படியே உடல் அமைகின்றது. உடல் இயங்குகின்றது. இதைத் தெளிவாக அறிய அனுபவம் மிகவும் தேவையானது. இந்த அடிப்படைத் தத்துவமே சித்த மருத்துவ மாகும்.

- நல்லை அமிழ்தன்-

# விளைவு

மயானத்தை விற்று
வயல்கள் வாங்கினால்
பிணங்கள் விளையும்!

மதுவை விற்று
நகைகள் வாங்கினால்
நோய்கள் விளையும்!

மானத்தை விற்று
பதவிகள் வாங்கினால்
சாபங்கள் விளையும்!

இனத்தை விற்று
சலுகைகள் வாங்கினால்
பழிகள் விளையும்!

கல்வியை விற்று
பட்டங்கள் வாங்கினால்
பந்தங்கள் விளையும்!

பணத்தை விற்று
நட்டங்கள் வாங்கினால்
மரணம் விளையும்!



ஆரையம்பதியில்......

அழகிய ௨௨ கரட்.
தங்க நகைகளை
உத்தரவாதத்துடன்
பெற்றுக் கொள்ள
இன்றே விஜயம் செய்ய
வேண்டிய ஒரே இடம்
தங்க நகைகளின்
சொர்க்காபுரி

**அபிராமி ஜீவல்ஸ்**





பிரதான வீதி
ஆரையம்பதி - 02

தொ.பே : 065 - 3644944
077 - 6506329

AD/0008

களுவாஞ்சிகுடியில்....


நேர்கடனுக்குரிய அடையாளப்
பொருட்களையும், உங்களுக்குத்
தேவையான மங்கையர் மனங்கவரும்
தங்க நகைகளையும்
உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள
நம்பிக்கையானஒரே இடம்

**கிஷாலினி**
**நகைத் தொழிலகம்**



ஆஸ்பத்திரிக்கு
முன்பாக
களுவாஞ்சிகுடி
தொ.பே: 065-4910527

AD/0028





மட்டு நகரில்......

அழகிய 22 கரட் தங்க நகைகளை
உத்தரவாதத்துடன் செய்து
பெற்றுக்கொள்ள நாட வேண்டிய
தங்க நகைகளின் சொர்க்காபுரி



**சுபாஜினி**
**ஜுவலரி**


51, பிரதான வீதி
மட்டக்களப்பு.

தொ.பே: 065-2224863

AD/0005

# தென்றலின் தேடல்

-ஆ.மு.சி.வேலழகன்




கவிதை நூலுக்கான ("செங் காந்தள்") இலங்கை சாகித்திய விருது பெற்ற கவிஞர் ஆ.மு.சி.வேலழகன் இலங்கை போக்குவரத்துச் சபையில் சாரதியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். 1972ஆம் ஆண்டு முதல் இன்று வரை பதின்மூன்று (13) நூல்கள் எழுதி வெளியிட்டுள்ள இவரது சாதனையை **"தென்றல்"** பாராட்டுவதில் பேருவகை அடைகிறது.

இவர் திருப்பழுகாமத்தில் பிறந்து, தனது வாழ்நாளின் பெரும் பகுதியை இலக்கியத்துறைக்காக அர்ப்பணித்துள்ளார்.

**இவர் எழுதிய நூல் பட்டியல்**

1. தீயும், தென்றலும் (கவிதைத் தொகுதி -1972)
2. சாதியா? சதியா? (உரைச் சித்திரம் -1973)
3. உருவங்கள் மானிடராய் (கவிதைத் தொகுதி-1994)
4. கமகநிலா (சிறுகதைத் தொகுதி) -1996)
5. வேலழகன் கவிதைகள் -1996)
6. மூங்கில் காடு (சிறுகதைகள் - 2001)
7. விழியும் வழியும் (நாவல் - 2004)
8. சில்லிக் கொடி ஆற்றங்கரை (நாவல் - 2004)
9. கோடாமை சான்றோர்க்கனி (நாவல் -2006)
10. செங்காந்தள் (கவிதைகள் - 2006)
11. இவர்கள் மத்தியிலே (நாவல் - 2006)
12. கேட்டுப் பெற்ற வரம் (சிறுகதைகள் - 2007)
13. திருப்பழுகாமம் ஒரு சுருக்க வரலாறு (ஆய்வு நூல் - 2008)

இவற்றுள் "செங்காந்தள்" கவிதை நூல் சாகித்திய விருது பெற்றது. அத்தோடு "மூங்கில் காடு" நாவலை தமிழ் நாடு பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியர் இளங்கோ ஆய்வு செய்து M.Phil பட்டம் பெற்றுள்ளார். **"சில்லிக் கொடி ஆற்றங்கரை"** நாவலை தஞ்சைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் இரா. கோவிந்தன் ஆய்வு செய்து M.Phil பட்டம் பெற்றுள் ளார். இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் சில நூல் களை ஆய்வுக்கு கொடுத் துள்ளார்.



ஆ.மு.சி.வேலழகன் அரச சாஹித்திய விருது பெறும்போது

அடுத்து அவர் ஆரம்பித்து நடாத்திய மன்றங்களின் விபரம் வருமாறு:-

1958 - திருப்பழுகாமம் கண்ணகி கலைக்கழகம்

1963 - அமிர்தகழி புன்னைச்சோலை - முரசொலி நாடக மன்றம்

1965 - திருக்குறள் முன்னணிக்கழகம்

1970 - மட்டுநகர் தமிழ் கலாசார மன்றம்

1971 - மட்டுநகர் திருக்குறள் முன்னணிக் கழகம்

1981 - திருப்பழுகாமம் திருக்குறள் முன்னனிக் கழகம்

1985 - மட்/இ.போ.ச கலாசார மன்றம்

1988 - படுவான்கரை விவசாயிகள் அபிவிருத்திக் கழகம்

1989 - அம்பாறை மகிந்தபுர திருக்குறள் முன்னணிக்கழகம்

1997- மட்டக்களப்பு மாவட்ட தமிழ் எழுத்தாளர் பேரவை

2004 - வாழைச்சேனை திருக்குறள் முன்னனிக் கழகம்.

இவ்வாறாக பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் இன்றுவரை தொடர்ந்து எழுதி வரும் வேலழகன் எழுத்தாற்றலோடு, சமூகப் பணியிலும் தனது ஈடுபாட்டை செலுத்தி வருவதை நாம் கண்கூடாகக் கண்டு கொண்டிருக்கின்றோம்.

# உண்மையில் நீ யார்?

- ஏறாவூர் தாஹிர் -

கவித் தென்றல்

வித்தின் முத்தாய்,
விந்தின் சொட்டாய்,
கருவின் உருவாய்,
உருவின் வடிவாய்,
'மழலை' எனலாய்
மண்ணில் மலர்ந்தாய்!
சில நாட் கடந்து
கால், கை வளர்ந்து
சிறுவன், சிறுமி
என நீ நிமிர்ந்தாய்!
வருடம் கழிந்து,
வனப்பில் மிளிர்ந்து,
வாலிப வயதில்,
வளர்பிறை நிகர்வில்
குமரன், குமரியாய்
குதூகலம் கொண்டாய்!
காலம் கரைய,
கட்டுடல் கலைய
முதியோராகி நீ
முடங்கிப் போனாய்!
ஊனைப் பிரிந்து
உயிர் சென்றதன் பின்
'பிரேதம்' என்று நீ
பிரலாபிக்கிறாய்!
உண்மையில் நீயார்?
உன் பெயரென்ன?

* * *

'இலங்கையன்' என்றாய்!
'இந்தியன்' என்றாய்!
'ஆங்கில நாட்டு
ஆள் நான்' என்றாய்!
'சீனன்' என்றாய்!
'சிரியன்' என்றாய்!
சீவியம் போனதும்
'பிரேதம்' என்கிறாய்!
உண்மையில் நீயார்?
உன் பெயரென்ன?

* * *

'தலைவன்' என்றாய்!
'தளபதி' என்றாய்!
'உழவன்' என்றும்,
'உயர்குலம்' என்றும்,
உன்னையே நீயே
உயர்த்திக் கொண்டபின்,
மரணம் அடைந்ததும்
'பிரேதம்' என்கிறாய்!
உண்மையில் நீயார்?
உன் பெயரென்ன?

* * *

'கண்டியான்' , 'காலியான்
' கடுகண்ணாவையான்
'மட்டக்களப்பான்
'மட்டுவில் வடக்கான்
'ஏறாவூரான்
'எருக்கலம் பிட்டியான்....
என்று வகுத்து,
பிரித்துச் சிதைத்து.....
இனம், மொழி, மதங்களால்
இடர்களை வளர்த்த பின்,
மரணம் அடைந்ததும்
'பிரேதம்' என்கிறாய்!
உண்மையில் நீயார்?
உன் பெயரென்ன?

# தங்கமான புருஷன்



- அன்பு மணி -

"எங்கடி என்ட ருத்பேஸ்ட்?"
"வச்ச இடத்தில தேடிப்பாரு"
"வச்ச இடத்தில தான் தேடிப் பாத்தன் காணல்ல. நீதான் எடுத்துப் பாவிச்சுப் போட்டு வேறெங்கேயோ வச்சிருக் கிறாய்"
"நான் எடுக்கல்ல"
"நீ தான் எடுத்த"
"நான் எடுக்கல்ல"
"இல்ல, நீ தான் எடுத்த"

அம்மா குறுக்கிட்டாள்

"விட்ட விடியங்காட்டில தொடங்கித் தீங்களா?"

அந்தா ஜன்னல் படியில கிடக்கு ருத்பேஸ்ட் கும்பம் எடுத்துப் பாவியுங்க. கால்காசு பெறாத விஷயத்துக்கெல்லாம் சண்டை சண்டை "சண்டை"

விமலராணி பல்விளக்கி முகம் கழுவி, சாமி கும்பிட்டு காலைச் சாப்பாட்டுக்காக மேசையில் வந்து உட்கார்ந்தாள். தானே பிளாஸ்கிலிருந்து தேநீர் ஊற்றிக் குடித்தாள் தானே சாப்பாட்டினை எடுத்துத் தட்டில் போட்டுச் சாப்பிட்டாள். சாப்பாடு முடிந்ததும், சாந்தம் அடைந்தாள்.

சலசலவெனச் சிரித்தாள்.

"இந்தக் கலகலப்பு சண்டை பிடிக்கக்குள்ள எங்க போனது? ஆறுத லாகக் கேட்டிருக்கலாம் தானே" - அம்மா.

"சண்டை பிடிக்கக்குள்ள நீங்களும் சொல்லியிருக்கலாம் தானே - ஜன்னல் படியில ருத்பேஸ்ட் இருக்கு தெண்டு"

"உன்னோட கதைக்கேலா என்னால"

"அப்பவிடு - நான் பஜனைக்குப் போயிட்டு வாறன்."

"போய்த் தொலை!"

விமலராணி சூட்டி மோட்டார் சைக்கி ளைத் தள்ளிக் கொண்டு புறப்பட்டு விட்டாள்.

"மகாராணி ஊர்வலம் கிளம் பிட்டா போல".

"சும்மா இருடி, நாற்பது வயது ஆகியும் திருமணம் நடக்கல்ல. என்ட

வேக்காட்டில அவள் குமுறுகிறாள். நாமதான் கொஞ்சம் அனுசரிச்சுப் போக வேணும்"

"என்னதான் அனுசரிச்சுப் போனாலும் அவள் திருந்த மாட்டாள். இப்படித்தான் இருப்பாள்"

பேப்பர் பார்த்துக் கொண்டிருந்த பாமா துள்ளிக் குதித்தாள்.

"அம்மா இஞ்ச பாருங்க. மணமகள் தேவை விளம்பரம் டெலிபோன் நம்பரும் இருக்கு. அமிர்தகழி விலாசம் தான் குடுத்திருக்கு"

"பேப்பர் விளம்பரம் பார்த்துத் திருமணம் செஞ்சா பின்னால ஏகப்பட்ட பிரச்சினைகள் வரும். உண்மையைச் சொல்ல மாட்டாங்க"

"இல்லம்மா, வயது நாற்பத் தைந்து, ஓட்டோ ட்ரைவராம், சீதனம் எதிர்பார்க்கல்லையாம். வயதுப் பொருத் தம் முக்கியமாம்......."

"வேணாம். வேணாம். விடு. எந்தப் பற்றைக்குள்ள எந்தப் பாம்பு இருக் குமோ, யாருக்குத் தெரியும்?"

"இல்லம்மா! இதைக் கேட்டுப் பாப்பம். டெலிபோன் நம்பர் இருக்குது தானே!"

"என்னண்டான செய்!"

டெலிபோனில் பல முறை உரையாடி, பெண்ணைப் பார்க்க வருவ தாக ஒத்துக் கொண்டான் பாஸ்கரன்.

குறித்த தினத்தில் வந்தான். வயது தோற்றவில்லை. நடுத்தர வயதுத் தோற்றமளித்தான். விமலரா ணிக்குப் பொருத்தமாகவே இருப்பான் போல் தோன்றியது.

தேநீர், சிற்றுண்டி சாப்பிட்டுப் பலதும் பத்தும் பேசிக் கொண்டனர்.

"ஏன் இந்த வயதில் திருமணம் என்று கேட்டதற்கு, தாலி கட்டின மனைவி யாருடனோ ஓடி விட்டாள் என்றும், தன் தேவைகளைக் கவனிப்பதற்கு ஒரு பெண் தேவை" என்றும் குறிப்பிட்டான்.

"சொந்தக்காரர் யாரும் இல் லையா? "

"எல்லாரும் வவுனியாவில் இருக்கிறாங்க. ஆனால் யாரும் என் னோட ஒட்டுதல் இல்லை."

"இப்போது இருக்கும் இடத்தில் எப்படிச் சமாளிக்கிறீர்கள்?"

"எல்லாம் கடைச் சாப்பாடு தான். காலையில ஓட்டோவில வெளிக் கிட்டுப் போனா இரவுலதான் வீடு திரும்புற. குளிச்சு சாமி கும்பிட்டு, கடையிலிருந்து கொண்டு வந்த சாப்பாட்டுப் பார்சலைச் சாப்பிட்டு விட்டுப்படுத்தா, இனி விடியக் காலை யில தான் எழும்புற. ஒரு பிளெயின் டீ போட்டுக் குடிச்சிட்டு, ஓட்டோவை எடுக்கிறதான்."

"அப்பிடியெண்டா, உங்க ளுக்கு மனைவியே தேவை யில்லை. இப்படியே சமாளிக்கலாம் தானே?"

"சமாளிக்கலாம் தான். ஏதாவது சுகயீனம் ஏற்பட்டால் பார்க்க மேய்க்க ஒருத்தரும் இல்லை."

**"பக்கத்தில் இருக்கிறவங்க வந்து உதவி செய்ய மாட்டாங்களா?"**

**"எத்தின நாளைக்கு? அவங்களுக்கும் அலுத்துப் போயிட்டுது. சமாளிக் கிறது கஷ்டம்"**

துருவித் துருவிக் கேட்ட கேள்விகளுக்கெல்லாம், ஓரளவு திருப்தியாகவே பதில் சொன்னான் பாஸ்கரன். இனிக் கேட்பதற்கு எதுவுமில்லை என்ற நிலையில், விஷயம் முடிவுக்கு வந்து விட்டது.

பாஸ்கரன் புறப்படுமுன், பெண்ணிடம் ஒரு வார்த்தை நேரில் கேட்டுக் கொள்ள வேண்டும் என்றான்.

வாசல் முற்றத்தில் இருவரும் நின்று தனியாகப் பேசினார்கள். விமலராணியும் சம்மதித்து விட்டாள்.

திருமணம் ஜாம் ஜாம் என்று நடந்தது.

எந்தக் குறையும் வைக்க வில்லை.

மணமகன் சார்பில் யாருமே வரவில்லை. பக்கத்து வீட்டில் தங்கியிருந்து, மணமகன் அழைத்து வரப்பட்டார். ஆலய தரிசனம் செய்து மணமகள் வீட்டுக்கு வந்த பாஸ்கரன் ஆராத்தியுடன் வரவேற்கப்பட்டான்.

மணவறை அலங்காரம், மண்டப அலங்காரம், எல்லாம் பிரமாதம். இரவு வேளையில் பதிவுகாரர் அழைத்து வரப்பட்டு மணவறையிலே திருமணம் பதிவு செய்யப்பட்டது. பீச்றோட் ஹாஜியார் சாப்பாட்டுக் கடையில் இடியப்ப புரியாணி ஏற்பாடு செய்யப்பட்டது.

வளவு நிறைந்த சனக்கூட்டம். வீடியோக்காரர், கமராக்காரர் எல்லோரும் வெளுத்து வாங்கினர் மேளகாரர் வெளுத்துக் கட்டினர். எல்லாம் முடிந்து இரவு பத்து மணிக்கு மணமக்கள் தமக்குரிய அறைக்குச் சென்றனர்.

கடன், உடன்பட்டு விமலராணியின் திருமணத்தை நிறைவேற்றி வைத்தது, வீட்டில் உள்ள அனைவருக்கும் நிம்மதியைத் தந்தது.

மணமக்கள் மணமகனின் ஓட்டோவில் அடிக்கடி வெளியே சென்று வந்தனர். விமலராணி கலகலப்பாக இருந்தாள். வழக்கமான சிடுசிடுப்பு எல்லாம் மறைந்து விட்டது. மூன்று நாள் கழிந்ததும் மணமகன் வேலைக்குப் போகத் தொடங்கி விட்டார்.

கல்முனை, அக்கரைப்பற்று என ஹயர் தொடர்ந்தது. உகந்தைக்கும் இரண்டு மூன்று ஹயர் கிடைத்தது. மணமகளின் அதிஷ்டம் என்று பேசிக் கொண்டோம். சில நாட்களில் ஓட்டோ ரிப்பேராகி பாஸ்கரன் கல்முனையில் தங்கி விடுவதுமுண்டு.

இதற்கிடையில் பாஸ்கரனுக்கு வேறுபல வாய்ப்புகளும் வந்தன. வங்கி, செக்கியூரிற்றி அலுவலர் நேர்முகப் பரீட்சை அதில் தேறினால் பொலனறுவையில் பயிற்சி என்றும் மூன்று மாதத்திற்கு அங்கேயே தங்கிப் பயிற்சி பெற வேண்டும் என்றும் கூறினான்.

அதன்படி புறப்பட்டுப் போய் ஒருவாரம் ஆகிவிட்டது.

திடீரென்று ஒரு நாள் தொலை பேசி வந்தது. பாஸ்கரன் அக்கரைப்பற்றுப் பொலிசில் இருப்பதா கவும் பிணை எடுக்க வர வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. அதிர்ச்சி என்றால் அதிர்ச்சி!

பொலனறுவையில் தங்கியிருந்து பயிற்சி பெறப் போன பாஸ்கரன் அக்கரைப்பற்று பொலிசில் அகப்பட்டது எப்படி? ஒரே குழப்பம். எவ்வாறாயினும், பொலிஸ் ஸ்டேசனுக்குச் சென்று ஆகவேண்டியதைக் கவனிக்க வேண்டும் என ஏற்பாடு செய்கையில் திருக் கோயிலிலிருந்து ஒரு தொலைபேசி வந்தது. பேசியவர் திலகவதி. அவர் சொன்ன சேதி குழப்பத்துக்கு மேல் குழப்பமாகி விட்டது. தான் பாஸ்கரனின் மனைவி என்றும் தனக்கு வளர்ந்த இரண்டு பெண் குழந்தைகள் இருக்கின்றன என்றும், தனது கணவருக்கு மீண்டும் திருமணம் செய்து வைத்தது குற்றம் என்றும் அதற்காக பொலிஸ் நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் திலகவதி மிரட்டினாள்.

இரண்டாவது திருமணம் செய்தால் திருமணம் செய்தவருக்கே தண்டனை என்பது திலகவதிக்குத் தெரியாது போலும். எல்லோரும் இடிந்து போய் உட்கார்ந்திருந்த போது திலகவதி மீண்டும் தொலைபேசி எடுத்தாள்.

பாஸ்கரனுக்கு ஏற்கனவே பல திருமணங்கள் நடந்துள்ளன என்றும் அதற்கான திருமணச் சான்றிதழ்கள் தன்னிடம் இருக்கின்றனவென்றும், வேண்டுமானால் போட்டோபிரதிகளை அனுப்பிவைக்க முடியும் என்றும் அவள் கூறினாள். அதன் காரணமாகவே பாஸ்கரனுடன் வெறுப்புக் கொண்டிருந்ததாகவும் அவள் கூறினாள்.

விஷயம் இப்போது ஓரளவு எங்களுக்கு விளங்கியது. ஆனால் இதை எப்படி விமலராணிக்குத் தெரிவிப்பது? எப்படி அவள் இதைத் தாங்குவாள்?

விமலராணி பஜனையிலிருந்து வந்ததும் ஒருவாறு அவளுக்கு விஷயத்தை விளங்க வைக்க முயன்றனர். அப்போது அவள் மேலும் சில அதிர்ச்சித் தகவல்களைச் சொன்னாள்.

தனது நகை முழுவதையும் மக்கள் வங்கியில் அடகு வைத்து, ரூ 95,000/= அவனுக்குக் கொடுத்தமை, திருமண அன்பளிப்பாக வந்த ரூ50,000/= முழுவதையும் அவனே எடுத்துக் கொண்டமை.

**“அடிபாவி, இந்த விசயத்தை நீ எங்களுக்குக்கூடச் சொல்லவில்லை. முன்கூட்டியே சொல்லியிருந்தால் அதைத் தடுத்து நிறுத்தியிருக்கலாமே” “எப்படியும் பணத்தைத் தந்துவிடுவார் என்ற நம்பிக்கையில் உங்களுக்குத் தெரியாமல் கொடுத்து விட்டேன் அம்மா” “இனி இந்தப் பணத்தை அவனிடமிருந்து எப்படி மீட்பது? கடன் வாங்கித் திருப்பிக் கொடுக்காத குற்றத்திற்காகத் தான், அவன் கைது செய்யப்பட்டிருக்கிறான்.”**

பிணை எடுக்க யாரும் இல்லாததால் பாஸ்கரன் மட்டக்களப்புச் சிறையில் பல மாதங்கள் கிடந்தான். எப்படியோ புதுவருஷத்தில் ஜனாதிபதியின் மன்னிப்பைப் பெறும் கைதிகளில் ஒருவனாகிச் சிறையில் இருந்து விடுபட்டான். ஆனாலும் விமலராணியின் வீட்டுக்கு வர முயற்சிக்கவில்லை.

பல வாரங்களுக்குப் பின் விமலராணி பரபரப்புடன் வீட்டுக்கு வந்தாள். அவள் சொன்ன செய்தி பயங்கரமாக இருந்தது.

"அம்மா இன்று அவன் சாயி சமித்திக்கு வந்தான். தன்னுடன் வரும்படி கூப்பிட்டான். நான் மறுத்து விட்டேன். ஆட்கள் பலர் வந்ததும் மெல்ல நழுவிவிட்டான்."

**"நீ இனிமேல் கவனமாக இருக்க வேண்டும் விமலா. இவ்வளவு அட்டூழியங் களையும் செய்து விட்டு, இன்னமும் உன்னிடம் வருவதென்றால், இதில் ஏதோ உள் நோக்கம் இருக்க வேண்டும். தனியாக எங்கும் போகாதே. பஜனைக்குப் போவதென்றால், யாருடனாவது சேர்ந்து போ."**

**"எனக்குப் பயமா இருக்கம்மா!"**

**"என்ன பயம்?"** ஆட்களைக் கண்டால் வரமாட்டான்.

**"இன்னும் எதற்காக வருகிறான். பணம் முழுவதையும் அபேஸ் பண்ணிட்டான். திலகவதி அனுப்பின திருமண சான்றிதழ்கள் மூலம் நாலு இடங்களில் திருமணம் செய்திருக்கிறான். உகந்தைக்குப் போறன், பொலனறுவைக் குப் போறன் என்று சொல்லிப்போட்டு திருக்கோவிலுக்குப் போய் முதல் மனைவியுடன் இருந்திருக்கிறான். நல்ல வேளையாக, கடனை மீளச் செலுத்தாத குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டான்"**

**"அம்மா! எனக்கொரு சந்தேகம். என் கழுத்தில் கிடக்கும் தாலிக் கொடியில கண் வைச்சிட்டானோ என்று எனக்குச் சந்தேகமாக இருக்கிறது."**

**"அப்படி உன் தாலிக் கொடியில் கைவைத்தால் கூச்சல் போட்டு ஆட்க ளைக் கூப்பிடு. "ஆட்களைக் கூப்பிடுற தென்ன? அவனை அங்கேயே கொலை செய்து போட்டு மறியலுக்குப் போவன்"**

**"சேச்சே! அப்படியெல்லாம் செய்து விடாதே. கோடு கச்சேரி என்று அலைய வேண்டும். இவ்வளவு அநீதிகளையும் அவன் செய்ய, நாம மறியலுக் குப் போறதா? முட்டாள் தனமா அப்படி ஏதாவது செய்து விடாதே"**

அம்மாவின் எச்சரிக்கை எடுபடவில்லை. அவள் தாலியில் கைவைக்க வேண்டும் என்றும் அதனால் அவள் அவனைக் குத்த வேண்டும் என்றும் விதி இருக்கும் போது யார் என்ன செய்ய முடியும்?

அந்தக்கோரம் நடந்தே விட்டது.

*(யாவும் கற்பனை)*

# "தென்றல்" குறுக்கெழுத்துப் போட்டி இல - 01

இரா.தவராசா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 மோ | 2 தி | 3 ர | ம | | 5 |
| 6 க | ரை | தி | | 8 த | கு |
| ம | | த் | | 9 வி | கா |
| | 10 மா | ன | ம | | |
| 11 பா | ச | ம் | | 12 பா | ய் |
| | ம் | | 13 ம | தி | |

**இடமிருந்து வலம்**

01. இதை தொலைத்ததால் சகுந்தலை வாழ்க்கையைத் தொலைத்தாள்.
06. இதற்காக பலரிடம் பலத்த போட்டி ஆனாலிது குழம்பிக் கிடக்கிறது.
08. பறவைகளின் இல்லம்
09. துறவிகளின் அடையாளம் திரும்பிக் கிடக்கிறது.
10. கால்க் காசுக்கு போன இது கோடி கொடுத்தாலும் பெற முடியாதாம்.
11. இதைச் சொல்லி பிள்ளைகளை பயமுறச் சொல்வார்கள்.
12. படுக்கைக்குரியதில் இதுவும் ஒன்று
13. நிலா அல்லது அறிவு

**மேலிருந்து கீழ்**

01. இது முப்பது நாளாம்
02. தடுப்புச் சீலை
03. இதையும் நகைகளில் பதித்து சிலர் அழகு பார்ப்பார்கள்.
05. இதை கொடுத்து விட்டான் என்றால் ஏமாற்றி விட்டான் என்று பொருளாம். குழம்பிக் கிடக்கிறது.
08. பொருட்களை இப்படியும் விற்பார்கள்.
10. இது பன்னிரெண்டானால் ஆண்டு ஒன்றாகும்.
11. மலரின் ஒத்த சொல்
12. சரியாக இரண்டாக பிரிக்கப்படுவது.

✳ விடைகளை இங்கு வெளியாகியுள்ள கூப்பனில் எழுதிக் கத்தரித்து, தபால் அட்டையில் ஒட்டி அனுப்ப வேண்டும்.

✳ தபால் உறைக்குள் வைத்து அனுப்பப் படும் கூப்பன் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

✳ முற்றிலும் சரியான விடைகளை எழுதுபவர்களில், குலுக்கல் மூலம் தெரிவாகும் முதல் மூன்று அதிஷ்டசாலிக ளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக 300/-, 200/-, 100/- வழங்கப்படும்.

✳ போட்டி முடிவுத்திகதி 15.09.2010

✳ விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி

**"தென்றல்" குறுக்கெழுத்துப் போட்டி இல.01**
**34/1, பழைய கல்முனை வீதி,**
**கல்லடி,**
**மட்டக்களப்பு.**


# புதிய வரவுகள்

**நூல்** : எனது இலக்கியச் சிந்தனைகள்

**ஆசிரியர்** : தமிழ் ஒளி, பண்டிதர். சீ.தம்பிராசா.

**வெளியீடு** : பண்டிதர் நூல் வெளியீட்டுக் குழு, பெரிய கல்லாறு.

**விலை** : ரூபா. 175.00





இந்நூலில் சங்கத்தமிழ் ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம், சொற்பொருள் விளக்கம், தெய்வப் புலவர் திருவள்ளுவர் சுருக்க வரலாறு, அமரகவி பாரதியார் சுருக்க வரலாறு, கம்பன் காட்டிய உலக சகோதரத்துவம் போன்ற தலைப்புகளில் பல்வேறு விடயங்கள் நுணுகி ஆராயப்பட்டிருக்கிறது.

160 பக்கங்களில் தெய்வப்புலவர் திருவள்ளுவரின் அட்டைப்படத்தைத் தாங்கி பயனுள்ள நூலாக - முழுப் பிரசவமாக வெளிவந்திருக்கிறது. எனது இலக்கியச் சிந்தனைகள் என்ற நூல்.

---

**நூல்** : நிழல்கள் (சிறப்பு மலர்)

**வெளியீடு** : நால்வர் கோட்டம் அன்பு ஆஸ்ரமம்





இந்நூல் பல்வேறு அறிஞர்களது வாழ்த்துச் செய்திகள்,த.கயிலாயப் பிள்ளை எழுதிய எதிர்காலத்தில் எம்.சிறுவர்கள் வாழ்வு எப்படியிருக்கும்? கட்டுரை, இந்து தர்மாச்சாரியார் ந.நாகராஜா எழுதிய சைவத் திருமுறைகளில் முதன்மை பெறும் நால்வர், பரதன், கந்தசாமி எழுதிய எண்ணியர் திண்ணியர் ஆகப் பெறின் கட்டுரை மற்றும் இல்லத்தின் தோற்றத்தை வெளி உலகுக்குப் புடம் போட்டுக் காட்டும் படங்கள் என்பவற்றை தாங்கி வெளி வந்திருக்கிறது.

85 பக்கங்களில் தாமரை மண்டப முகப்பு, நால்வரின் திருவுருவங்களையும் தாங்கி காலத்தின் கண்ணாடியாக தன்னை வெளிக் கொணர்ந்திருக்கிறது இந்நூல்.

# வரலாற்றின் ஊற்று அமிர்தகழி!

-மிதுனன்-



பக்கத்திலே அமிர்த கழி என்னும் கிராமம் அழகுற அமைந்திருப்பதாக விபுலாநந்தர் சொல்லியிருப்பது அமிர்தகழிக் கிராமத்துக்குச் சிறப்பைத் தருகிறது.

அமிர்தகழிக் கிராமத்தைப் பற்றி எவர் எழுதினாலும், பேசினாலும் ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் திருத்தலத்தைப் பற்றி கொஞ்சமாவது குறிப்பிடாமல் விட்டால் எந்தப் பேச்சும், எழுத்தும் முழுமை பெற மாட்டாது. அந்த வகையில் இங்கு வாழும் மக்களின் உயிர் மூச்சாக இந்த மாமாங்கப் பிள்ளையாரின் அருட்கடாட்சம் நிறைந்து காணப்படுகிறது.

சுவாமி விபுலானந்தர் எழுதிய **"யாழ்நூல்"** என்னும் நூலில் அமிர்த கழி கிராமம் அமைந்திருக்கும் இடத்தைக் குறிப்பிட்டிருப்பது பெருமைக்குரிய விடயமே.

வங்காள விரிகுடாக் கடலுக்கு அணிந்தாயுள்ள தோணா ஒன்றுக்குப்

அமிர்தகழி என்னும் பெயர் எப்படி வந்தது?

கடல் முகத்து வாரத்தை அண்டிய பகுதி அதிகமாக **"கழி"** நிறைந்து காணப்படுவது இயல்பு. அமிர்தகழிக் கிரா மத்துக்குப் பக்கத்தில் மட்டக்களப்பு முகத்துவாரத்தைப் பார்த்தாற் போலுள்ள கிராமத்துக்கு மட்டிக்கழி என்றே பெயர் உள்ளது. ஆகவே அமிர்தகழிக்கும் பெயர் வர இந்தக் கழியும் ஒரு காரண மாக அமைந்திருக்கலாம்.

ஸ்ரீஇராமபிரானின் வேண்டுதலின் பேரில் அனுமான் சிவலிங்கமொன்றை எடுத்து வருவதற்காக பாய்ந்து சென்று வானில் பறந்த போது அனுமனின் கால் மிதிபட்ட இடங்களெல்லாம் சிறு சிறு பள்ளங்களாகி அந்த இடங்களிலே நீர் தேங்கி நின்றதாகக் கர்ண பரம்பரை கதையொன்று சொல்லுகிறது.

இவை குளங்களாகவும், தோணாக் களாவும் பிற்காலத்தில் மாறியிருக்க வேண்டும்.

இன்றும் மாமாங்கப் பிள்ளை யார் வீற்றிருக்கும் திருத்தலத்திற்குப் பக்கமாக ஒரு குளமும், அதற்கு அடுத் தாற் போல் புன்னைச்சோலைக்கும், மட்டிக்களிக்கும் இடையிலே **'பழையாறு'** என்னும் பெயரில் ஒரு நந்நீர் குளமும் அதற்கும் அப்பால் **'சடைச்சாமியார்'** என்றழைக்கப்பட்ட நல்லதம்பிச் சாமியார் முருகன் கோவிலை வைத்து வழிபட்டு வந்த' இடத்திற்குப் பக்கத்திலே அமைந் துள்ள **'நல்லதண்ணீர் மடு'** என்னும் குளமும் அதறகப்பால் கடற்கரை யோரமாக **"சவுக்கடி"**க்குப் பக்கத்தி லுள்ள ஒரு தோணாவும் உள்ளதை யாவரும் அறிவர். எனவே அனுமன் மாமாங்கத் திலிருந்து முதலடியை வைத்து, கடலை நோக்கிப் பாய்ந்து சென்ற கால் தடங்களே இப்படிக் குளங்களாகவும் , தோணாக்களாகவும் காணப்படுவதாக ஐதீகம் இவைகளில் எதை சுவாமி விபுலானந்தர் குறிப்பிட்டார் என்பது தெரியவில்லை.

பண்டிதர் வீ.சி.கந்தையா அவர்களும், வித்துவான் F.X.C நடராசா அவர்களும் எழுதியுள்ள மட்டக்களப்பு தமிழகம்,மட்டக்களப்பு மாண்மியம் ஆகிய நூல்களிலும் மாமாங்கப் பிள்ளையார் திருத்தலம் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார் கள்.

இலங்கை மன்னன் இராவண னைச் சங்காரம் செய்து திரும்பும் வழியில் தற்போது அமிர்தகழி மாமாங் கப் பிள்ளையார் கோவில் அமைந்துள்ள இடம் அவரது சிவபூசைக்கு ஏற்ற இடமா கத் தெரிந்ததால் அங்கேயே வீற்றிருந்து சிவ வணக்கத்தில் ஈடுபட்டார். அப்போது பூசை செய்ய அவருக்குச் சிவலிங்கம் இல்லாத காரணத்தினால் தான் அனுமானை இந்தியாவுக்கு அனுப்பி வைத்தார். ஆயினும் திரும்பி வரச் சற்றுத்தாமதித்ததால் அவருடைய கோதண்டத்தை நிலத்திலே ஊன்றி ஒரு சிறு குளமாக்கி அங்கு கிடைத்த மண்ணைப் பிசைந்து ஒரு சிவலிங் கத்தைச் செய்து அதை வழிபட்டார். பிறகு அனுமன் கொண்டு வந்த சிவலிங்கத் தையும் அங்கேயே விட்டுவிட்டுச் சென்றதாகவும் மேற்குறித்த நூலாசிரியர் கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

இதன்பின் காலம் சில கடந்த பின் வன வேடுவர்கள் தற்செயலாக ஸ்ரீ இராமபிரான் வழிபட்ட இந்த சிவலிங் கத்தைக் கண்டெடுத்து ஓலையால் சிறு கோயில் அமைத்து காலங்காலமாக பூசை செய்து வந்ததாகவும் நம்மால் அறியமுடிகிறது.

காலப் போக்கில் இக்குளத்தைப் புனிதப்படுத்த எண்ணிய ஒரு முனிவர் இந்தியா சென்று அங்கு பாயும் ஒன்பது புனித நதிகளிலிருந்து நீர் கொண்டு வந்து இந்த மாமாங்கக் குளத்தில் ஊற்றிக்

கலந்து புனிதப்படுத்தியதாகவும் கர்ண பரம்பரைக் கதைகள் மூலமாக தெரிய வருகிறது.

இந்தக் குளத்தில் நீராடிய வர்களின் தீர்க்க முடியாத பல நோய்கள் மாயமாக மறைந்ததாகவும் குளத்தினுள் தேங்கியிருக்கும் நறுமணம் கமழும் **'சந்தனச்சேறு'** இதற்கு காரணமாக அமைந்திருக்கலாம் எனவும் பெரியவர் கள் பேசிக் கொள்கிறார்கள்.

மட்டுநகரை அரசாண்ட ஆடகச வுந்தரி என்னும் அரசி ஒரு நாள் தன் பரிவாரங்களோடு இங்கே வந்தபோது இக்குளத்தின் மகிமையைக் கேள்வி யுற்று குளத்தில் இறங்கி நீராடியதாகவும் அதன் பயனாக அசிங்கமான அவளுக்கு இருந்த மூன்று முலைத்தடங்களில் ஒன்று இல்லாமல் போய் அழகான பெண்ணாக அவள் உருமாறியதாகவும் **"மட்டக்களப்புத் தமிழகம்", "மட்டக்க ளப்பு மான்மியம்"** ஆகிய நூல்களில் குறிப்பிடப் பட்டுள்ளன.

அமிர்தம் போன்ற தீர்த்தமும், சந்தன மணங்கமழும் சேறும்(கழி) இங்குள்ள குளத்தில் மாத்திரமல்ல அல் லயலிலுள்ள வீட்டுக் கிணறுகளிலும் உள்ளதால் அமிர்தகழி என்னும் பெயர் இக்கிராமத்துக்கு வைக்கப்பட்டிருக்கலாம் என்பதும் வித்துவான் வீ.சி கந்தையா பண்டிதரின் முடிவாகும்.

இது தவிர அமிர்தகழி கிராமம் எல்லா வகையிலும் ஒரு முன்னணிக் கிராமமாகத் திகழ்வது கண்கூடு.

ஆர்.பி.கதிர்காமர் என்பவரை மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினரா கத் தெரிவு செய்த பெருமை அமிர்தகழிக் கிராமத்தையே சாரும்.

அமிர்தகழி கிராமத்தைச் சூழவுள்ள மட்டிக்கழி நாவலடி, பால மீன்மடு, ஊறணி, கருவப்பன்கேணி, நாவற்கேணி ஆகிய கிராமத்தில் உள்ளவர்களெல்லாம் தொன்று தொட்டு மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தை நிர்வகித்து வருகிறார்கள்.

மருத நிலத்தைச் சேர்ந்த இக்கிராமத்தவர்களெல்லாம் மீன்பிடித் தொழிலையே பிரதான தொழிலாகக் கைக்கொண்டு வருகின்ற போதிலும் அரசாங்கத்திலும், தனியார் துறைகளி லும் பல உயர் பதவிகளை வகித்து வருவதையும் நாம் காணலாம்.

கிழக்கிலங்கையின் பிரசித்தி பெற்ற வாழைச்சேனை காகித ஆலை யின் கணக்காளராகவும், பின்பு ஆலை முகாமையாளராகவும் (Mill Manager) இருந்த திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் இதே அமிர்தகழிக் கிராமத்தைச் சேர்ந்தவராவார். மட்/கல்வித்திணைக் களத்தில் பணிப்பாளராகக் (D.E) கடமை பார்த்த எஸ்.எஸ்.மனோகரன் அவர்க ளும் அமிர்தகழியின் அயல் கிராமமான பாலமீன்மடுவைச் சேர்ந்தவர் தான். மற்றும் பலர் ஆசிரியர்களாகவும், எழுதுவினைஞர்களாகவும், அதிபர்களா

கவும், உத்தியோகஸ்தர்களாகவும், கிராம சேவையாளர்களாகவும், பொறியியலாளர்களாகவும் வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் சேவையாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

இவர்களைத் தவிர கவிஞர்களாகவும், எழுத்தாளர்களாகவும், நாட்டுக்கூத்துக்கலைஞர்களாகவும் பலர் கலைச்சேவையாற்றி வருகின்றனர். இவர்களில் நாடறிந்த கவிஞர்களான கவிஞர்.காசி. ஆனந்தன், கவிஞரும் எழுத்தாளருமான செ.குணரத்தினம், எழுத்தாளர் ஓ.கே.குணநாதன், கா.சிவலிங்கம், கலைக்கோட்டன் அ.இருதயநாதன் ஆகியோரும் அடங்குவர்.

இசைத் துறையிலும் அமிர்தகழி கிராமம் பின் நிற்கவில்லை.

பல கலைஞர்களை வளர்த்துவிட்ட **'பல்லிசைக் குருசில்'** ஜீவம் யோசப், மட்டக்களப்பு நீதி மன்றத்தின் முன்னால் நிறுவப்பட்டுள்ள சுவாமி விபுலாநந்தர் சிலையை உருவமைத்த ஜீவம் சகோரர்களில் ஒருவரான மறைந்த டாக்டர் ஆறுமுகம், மட்/கல்விக்காரியா லயத்தின் முன்பாக வைக்கப்பட்டிருக்கும் சிலையை வடித்த ஊறணியைச் சேர்ந்த டாக்டர் கந்தசாமி போன்றோரும் இந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்களேயாகும். இவை மட்டுமல்ல வட கிழக்கு மாகாண சபையில் உதவிப் பணிப்பாளராகவிருந்து தமிழையும், இலக்கியத்தையும் வளர்த்த ஓய்வு பெற்ற திரு.செ.எதிர்மனசிங்கம் அவர்களும் இந்தக் கிராமத்தின் சொந்தக்காரரே ஆகும்.

பாலமீன்மடுவைச் சேர்ந்த சதாசிவம், அமிர்தகழியைச் சேர்ந்த குழந்தைவேல், நாவலடியைச் சேர்ந்த நல்லதம்பி பூசாரியார், மற்றும் செல்வராசா, கிருஷ்ணப்பிள்ளை, ஊறணியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை போன்ற இன்னும் பலரும் நாட்டுக் கூத்தை எழுதி நடித்து கலை வளர்த்து ஊருக்குப் புகழ் சேர்த்தவர்களாவர்.

மட்டக்களப்பின் பிரபல தொழில் அதிபர்களாகவிருக்கும் 'அகிலா' ஹாட்வெயார் உரிமையாளர் இராசம், றைஸ்மில் மற்றும் பல தொழில் ஸ்தாபனங்களை வைத்துத் திறம்பட நடாத்தும் 'தீசன்' அவர்களும் இக்கிராமத்துக்கு புகழ் சேர்ப்பவர்களாகும்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி, சக்தி ஆகியவற்றிலெல்லாம் தங்கள் திறமைகளை வெளிக்காட்டிவரும் திருமதி. நிலாமதி பிச்சையப்பா, மஹிந்த குமார், சுசீவா ஆகியோரும் இந்தக் கிராமத்தின் வித்துக்கள் தான் என்பதை இன்னும் பலருக்குத் தெரிந்திருக்காது. இது மாத்திரமன்றி பிரபல ஓவியர் **'கிக்கோ'**, நாடக எழுத்தாளரும், சிறந்த நடிகருமான தெய்வநாயகம் அலோசியஸ் எல்லோருமே இதே கிராமத்தைச் சேர்ந்த கலைஞர்கள் தான். அதிகமேன் அம்பாறை

ஓட்டுத் தொழிற்சாலையின் முகாமை யாளர் மற்றும் பிரதம பொறியியலாள ராகவிருந்த காலஞ்சென்ற மனோகர தாஸ் எல்லோருமே அமிர்தகழியைச் சேர்ந்தவர்கள் தான். இலங்கையின் எப்பகுதியிலும் இல்லாத கப்பலேந்தி மாதா கோவிலும் அமிர்தகழிக் கிராமத் தில் தான் அமைந்திருக்கிறது.

இவ்வாறெல்லாம் பல திறமை யானவர்களையெல்லாம் பெற்றெடுத்த பெருமை இந்த அமிர்தகழிக் கிராமத் தையே சாரும்.

அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையாரின் மூர்த்தி சிறிதெனினும் கீர்த்தி பெரியது தான். வருடா வருடம் அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தின் ஆடி அமாவாசைத் திரு விழாக்களும், தீர்த்தமும் இவ்வருடமும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் படவுள்ளன. அமிர்தகழியோடு சேர்ந்து மேற் குறிப்பிடப்பட்டுள்ள அவ் அயல் கிராமங்கள் ஏழும் ஒன்று சேர்ந்து நிர்வகித்து வரும் இவ்வாலயத்தின் வண்ணக்கரும், உதவி வண்ணக்கரும் இந்தக் கிராமங்களிலிருந்தே தெரிவு செய்யப்படுகிறார்கள். இதே போல வேளாளர் பகுதியைச் சேர்ந்த வண்ணக்கர்மார் கோட்டமுனைப் பிரதேசத்திலிருந்து தெரிவு செய்வது இங்கு குறிப்பிடத்தக்கது.

**முகப்பில்**

**மட்டக்களப்பு நகரின் நுழைவாயிலில் அமைக்கப்பட்டுள்ள பிரதான வளைவைக் காணலாம்**


**அடுத்த இதழில்**

க.பொ.த (சா.தரப்) பரீட்சைக்கு சித்திரப் பாடத்திற்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நலன் கருதி பிரபல ஆசான் சீ.டானியலால் தயாரிக்கப்பட்ட விளக்கக் குறிப்புக்கள் வெளிவரும்.

(ஆ+ர்)

# தமிழ்மொழி, தமிழ் இலக்கிய வரலாற்று முன்னோடி தி.தி.சரவணமுத்துப்பிள்ளை

- கலாநிதி. செ.யோகராசா -



திருகோணமலை தந்த இரட்டையர்கள் என்று குறிப்பிடத்தக்க அறிஞர்களிருவர் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் வாழ்ந்திருக்கின்றனர். தங்கஎது பன்முகப் பணிகள் காரணமாக தமிழிலக்கிய உலகில் நிலைத்திருக்கின்றனர். அவர்களே திருகோணமலை தி.த.கனகசுந்தரம்பிள்ளையும் தி.த. சரவணமுத்துப்பிள்ளையும் ஆவர். இவர்களுள் தி.த.கனகசுந்தரம்பிள்ளை பற்றி அறியப்பட்ட பிறகு தி.த.சரவண முத்துப்பிள்ளை பற்றி அறியப்படவில்லை. தி.த.சரவணமுத்துப்பிள்ளையின் பங்களிப்புகளுள் மோகனாங்கி (1895) நாவல் அறியப்பட்டளவிற்கு தத்தைவிடு தூது பிரபந்தம் (1892) பற்றி அறியப்படவில்லை. **'தத்தை விடுதூது'** அறியப்பட்டளவிற்கு **'தமிழ்பாஷை'** என்ற ஆய்வு நூல் அறியப்படவில்லை. அந்நூல் தமிழ் மொழி வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு என்பன தொடர்பான அறிவியல் நோக்குடைய சிந்தனைகளை முதன் முதலாக முன்வைக்கின்றது. இவ்விதத்தில் தி.த.சரவண முத்துப்பிள்ளையை தமிழ்மொழி வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு சார்ந்த துறைகளில் தமிழ் முன்னோடியாக்குகின்றது!

தமிழ்மொழி வரலாறு பற்றி கவனிக்கின்ற போது முதலில் நினைவிற்கு வருவது தமிழ் மொழியின் பிறப்புப் பற்றிய சமகால ஆய்வாளரது நோக்கு. இவர்கள் பலரும் தமிழ் மொழியின் தோற்றத்தினை கடவுளோடு தொடர்புபடுத்தியே பார்த்து வந்துள்ளார். உதாரணம் ஆறுமுக நாவலரது பின்வரும் கூற்று :-

**"சமஸ்கிருதம், தமிழ் என்னும் இரண்டு பாஷைக்கும் முதலாசிரியர் சிவபெருமான்.."**

நவீன கவிதை முன்னோடியும் புரட்சிகரமான சிந்தனை கொண்டவனுமான பாரதி கூட அவ்வாறு தான் எழுதுகின்றான:-

**"ஆதியில் பரமசிவனால் படைப்புற்ற மூல பாஷைகள் வடமொழியென்று சொல்லப்படும் சமஸ்கிருதமும் தமிழுமேயாம் என்று பண்டைத் தமிழர் சொல்லியிருக்கும் வார்த்தை வெறும் புராணக் கற்பனையன்று. தர்க்க சரித்திர ஆதாரங்களுடையது."**

மாறாக தி.த.சரவணமுத்துப் பிள்ளையின் பார்வை இவ்வாறு அமைகின்றது:-

**"சிவபெருமானே தமிழ்ப் பாஷையைச் சிருஷ்டித்தாரென வைத்துக் கொள்வோம் அதனாற்றமிழ் பெற்ற பயன் யாதோ தமிழ் மாத்திரந்தானா கடவுளாற் சிருஷ்டிக்கப்பட்டது? மறு பாஷைகள் யாவராற் சிருஷ்டிக்கப்பட்டனவோ? அன்றித் தாமே முளைத்தனவோ? சகல பாஷைகளுங் கடவுளாற் சிருஷ்டிக்கப் பட்டனவாயின் தமிழ் கடவுளாற் சிருஷ்டிக்கப்பட்டது என உரத்துக் கூறுவதனாற் தமிழ் பெற்ற ஊதிய மென்னோ?"**

தொடர்ந்தும் எழுதுவதாவது:-

**"தமிழ் கடவுள் பேசும் பாஷையென்பராயின் மறு பாஷைகள் பேசுவோரிடத்துக் கடவுள் பேச வேண்டுமாயின் தமிழிலேயே பேசுவார்? மொழி பெயர்ப்பதற்கொருவரை வைத்திருக்கின்றனரா?....... அதுவுமன்றிக் கடவுள் ஹிபுரு பாஷை பேசினாரெனக் கிறிஸ்தவரும் அராபி பாஷை பேசினாரென மகமதியருங் கூறில் அவர்க்கு யாது சொல்வரோ?"**

இவ்வாறு தி.த.சரவணமுத்துப் பிள்ளை கூறுவது காரணமாக அன்னாரைப் பகுத்தறிவுச் சிந்தனையாளர் என்று கருதுவது தவறு. கோணை முத்துக் குமாரசுவாமி யூசல் பாடியிருக்கிறார் அவர்!

தமிழ் இலக்கிய வரலாறு குறித்த தி.த.சரவணமுத்துப்பிள்ளையின் பார்வையும் அறிவியல் தழுவியது.

தமிழில் எழுந்த இலக்கண நூல்களுள் எமக்குக் கிடைத்தது தொல்காப்பியமே. எனினும் சிலர் அகத்தியமே முதல் இலக்கண நூலாக இன்று வரை கருது கின்றனர். ஆனால் அந்நூல் எமக்குக் கிடைக்கவில்லை. இது பற்றி தி.த.சரவணமுத்துப்பிள்ளை பின்வருமாறு கூறுவார்:-

**".... தமிழ்ப்பாஷை தொடங்கியவுடன் ஒரு பேரிலக்கணம் தமிழில் எழுதிய விந்தை நம் பண்டிதர் மார்க்கே புலப்படும். யாதொரு சிறு காரியத்திற்கும் சூத்திரம் எடுத்துக்காட்டும் பண்டிதர், வித்துவான்கள் முதலியோர் இலக்கியங் கண்டதற்கிலக்கணமியம்பலில்" என்னுஞ் சிறு நன்னூற் சூத்திரத்தை மறந்து தமிழிலக்கியமுண்டுபடுதற்கு முன்னேயே அகத்தியர் தமிழிலேயொரு பேரிலக்கண மெழுதினரெனக் கூறலும் ஒரு பெரு விந்தையே. ஆயினுமென்சப்த சமுத்திரத் தையும் ஓர் உழுந்தன வாக்கியுள்ளகையில் வைத்த சனஞ் செய்தருளிய அகத்தியர்க்கு இலக்கியமின்றி இலக்கணமெழுதல் ஒரு**

பெருங் காரியமோவெனச் சமாதானங் கூறலும் பண்டிதர் பாண்டித்தியத்திற் கெட்டினதன்றிச் சின்னாட் பல் பிணிச் சிற்றறிவினராகிய நமக்குப் புலப்படும் பொருளோ"

பண்டைய காலத்தில் இருந்த தாகக் கூறப்படும் முச்சங்கங்கள் குறித்தும் அங்கதம் விரவ கேள்விக் கணை தொடுத்துள்ளார் தி.த.சரவண முத்துப்பிள்ளை.

புராணங்களைப் போற்றிராத இலக்கிய வரலாற்றாசிரியர் குறைவே. அறிவியல் நிலை நின்று சிந்திப்பார். அவற்றை ஏற்பதில்லை. அவை பற்றிய தி.த.சரவணமுத்துப்பிள்ளையின் மதிப்பீடு வித்தியாசமானது:-

"புராணம் தொடங்கிய காலத்திலேயே தமிழுக்கும் அஷ்ட மத்திற் சனி வந்தது. தமிழ் மகிமையிழந்ததற்கும் சிறந்த காவியம் முதலியன எழுதப்படாது போனதற்கும்

புராணமே முக்கிய காரணமென்று யான் நினைக்கிறேன். தமிழில் எழுதப்படப் கூடிய பெருநூல்களில் மிகவும் கலபமாயெழுதக் கூடியது. தல புராணமே.... அவை நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது போகிப்பண்டி கையில் அக்கினி வளர்த்தற்கே தக்கனவாயின."

இதுவரை கூறிய வற்றைத் தொகுத்து நினைவு கூரும் போது தமிழ்மொழி , தமிழ் இலக்கியவரலாறு ஆகிய துறைகளில் தி.த.சரவணமுத்துப் பிள்ளை பதித்த தடங்கள் ஆழமானவை. தி.த.சரவணமுத்துப்பிள்ளை 19ம் நூற்றாண்டின் தமிழ் அறிஞர்கள் பட்டியலில் இணைந்து கொள்வதற்குப் போதுமானவை!

# வாசகர் நெஞ்சம்

"உங்கள் தென்றல்" சஞ்சிகை தொடர்பாக "தினக்குரல்" வார வெளியீட்டில் பார்த்து அறிந்து கொண்டேன். சஞ்சிகைகளை தேடி வாசிக்கும் ஆர்வம் உள்ள எனக்கு தென்றல் இதழ் ஒன்றை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நல்லான் ஹரிதாஸ்
கட்டுக்கிட்டுல,
நுவரெலியா.

"தென்றல்" சஞ்சிகை மூன்றாண்டில் கால்பதித்ததை அறிந்து பெரிதும் மனநிறை வடைகிறேன். விமர்சனங்கள் பல உலாவுவதையும் என்னால் கேட்க முடிகிறது. தென்றலே நீ எழுந்து எதிர் நீச்சல் போடுவாயாக!

எஸ்.ஜெயக்காந்தன்
வவுனியா.

# கல்லடியில் கல்விச் சேவை புரியும் முகத்துவாரம் விபுலானந்த வித்தியாலயம்

- ந.மகேஸ்பரராஜா -

முன்னாள் பாடசாலை
அபிவிருத்திச் சங்க செயலாளர்

கிழக்கின் விடியலின் விடியலாய் விடிகின்ற சூரியனும், வெண்மேகத் திரைகளும், வேட்கைதரும் அலைகளும், திகழ் மீன்பாடும் தேன்நாடாம் என்றுரைக்கும் மட்டக்களப்பிலே பல பேர்கள் சொல்லடியில் வாழ்கின்ற கல்லடியில் விக்கினங்கள் தீர்க்கின்ற கணபதியும், கடனின்றி "என்கடனென்று" வாழவைக்கும் எல்லோர் மனங்களிலும் மாரியாய்ப் பொழிகின்ற மாரியம்மனும், கலியுகத்தின் நிலைபேறாய், கண்கண்ட தெய்வமாய் காலமெல்லாம் காத்தருளும் நாகம்பிரானும், இருள் போக்கி அருளாட்சி செய்துவரும் புனித அந்தோனியாரும், மேற்லேயிருந்து அருள்பாலிக்க, உடன்நின்று அருள் செய்யும் செந்தூர் முருகனும், மக்கள் துயர் போக்கி அருள் வழங்கும் வேளாங்கண்ணியும், கிழக்கிலே அமர்ந்திருந்து அருள்பாலிக்க, பெயர் சொல்லக்காத்தருளும் தெய்வங்களாய், இன்றுவரை நின்றுரைக்கும் கல்லடி முகத்துவாரத்திலே 1960ம் ஆண்டு ஒரு பள்ளி.

அப்பொழுது, இப்பகுதி ஒரு பயங்கரமான காட்டுப்பகுதி, பிரதான வீதியான கல்முனை வீதியிலிருந்தும், சரவண வீதியிலிருந்தும் இப்பகுதிக்கு




அதிபர்

வீதிகளேயில்லை. ஒற்றையடிப்பாதைகள் மாத்திரமே போக்குவரத்துப் பாதையாக இருந்தன. கூப்பிடு தூரத்தில், சற்றுத் தள்ளித் தள்ளியே இப்பகுதியில் வாழ்ந்த மக்களின் வீடுகள் அமைந்திருந்தன. மின்சார வசதிகள் இல்லை. சிறிய அளவிலான ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயமும், ஓலை, தகரங்களில் ஆன சிறிய பிள்ளையார் ஆலயமும் தான் இப்பகுதிவாழ் மக்களின் வணக்கஸ் தலங்களாயிருந்தன. இப்படியான சூழ்நிலையில் இந்தக் காட்டுக்குள் பாடசாலை ஒன்றை ஸ்தாபிக்க வேண்டும் என்ற எண்ணம் யாருக்குமே தோன்றாது. ஆனால் தோன்றியது ஒருவருக்கு. ஆம் இதய சுத்தியோடு தன்னலம் கருதாது எதிர்கால குடிப்பரம்பலை மனதில் கொண்டு தீர்க்க தரிசனத்துடன் சிந்தித்ததன் காரணமாக அமரர் சோ.தர்மசேனாவுக்கு ஒரு பாடசாலையை இப்பகுதியில் ஸ்தாபிக்க வேண்டும் என்ற எண்ணம் மிக மிகத் தீவிரமாக தோன்றியது. அவருக்கு தோன்றிய எண்ணத்தின் பிரதிபலனாக ஊர்ப்பிரமுகர்களான அன்றைய கிராம அதிகாரியும், கிராமத் தலைவருமான அமரர் தம்பியப்பா தம்பியையா, பிரபல முறிவு வைத்தியர் அமரர் சரவணமுத்து பேரின்பசாமி, பிரபல சோதிடர் அமரர் ரணசிங்க வேவிசிங்கம் போன்றோரை அழைத்து, ஸ்தாபகர் அமரர் தர்மசேனா தனது ஆசையைக் கூறியுள்ளார். அந்த எண்ணத்தை அவர்கள் வெகுவாக வரவேற்று அவரை தொடங்குமாறு உற்சாகப்படுத்தி யுள்ளார்கள். பின்னர் அதனை எங்கே அமைப்பது? அதற்குரிய காணி என்பன பற்றி கலந்துரையாடி யுள்ளார்கள். அந்த வேளையில் அமரர் த. தம்பியையா தான் காணி தருவதான வாக்குறுதி யளித்ததோடு நிற்காமல், தற்பொழுது பாடசாலை அமைந்துள்ள காணியையும் ஒதுக்கிக் கொடுத்துள்ளார்.

அதன் பின்னர் அமரர் தர்மசேனா ஏற்கனவே ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியை முடித்துவிட்டு வீட்டில் இருந்த திருமதி வள்ளியம்மை தெய்வநாயகத்தையும் படித்து விட்டு வீட்டில் இருந்த திருமதி பத்மாவதி பொன்னுத்துரையையும் உதவியாகச் சேர்த்துக் கொண்டு கிடைத்த காணியினை துப்பரவு செய்து, ஓலையால் கொட்டில் அமைத்து, அமரர் தர்ம சேனாவின் தலைமையில் பாடசாலை ஆரம்ப நடைபோட்டுக்கொண்டிருந்தது. வீடு வீடாகச் சென்று மாணவர் மாணவிகளை பாடசாலைக்குச் சேர்த்தார்கள். பாடசாலையில் சேர்ந்த மாணவ மணிகளுக்கு தனது செலவி லேயே பணிஸ், பால் போன்றவற்றை வழங்கினார். இப்படியாக பாடசாலை நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது 1961ம் ஆண்டு பங்குனி மாதம் 22ம் திகதி அரசாங்கம் 60 மாணவர்களோடு இப் பாடசாலையை கையேற்று மட்/புதிய கொலனி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை என்ற பெயரும் சூட்டப்பட்டது.

அரசாங்கம் இப் பாடசாலையை கையேற்ற பொழுது இங்கு கற்பித்த



ஆசிரியர் குழாம்

ஆசிரியர்கள் மூவருக்கும் ஒரு இக்கட்டான நிலை ஏற்பட்டது. அதாவது 60 மாணவர்களுடன் இப்பாடசாலையை கையேற்றுள்ளதால் இரண்டு ஆசிரியர்கள் மாத்திரமே இருக்கலாம் என கல்வித் திணைக்களம் திட்ட வட்டமாக அறிவித்தது. இந்நிலையில் அமரர் தர்மசேனா சற்றும் தயங்காமல் பெண்கள் இருவரும் பணிபுரியட்டும் என்று கூறி பாடசாலையை விட்டு வெளியேறி மட்டக்களப்பு கூட்டுறவுச் சங்கத்திலே முகாமையாளராக இணைந்து கொண்டார். என்னே அவரின் தியாக சிந்தனை! அதன் பின்னர் பயிற்றப்பட்ட ஆசிரியையான திருமதி. வள்ளியம்மை - தெய்வநாயகத்தின் தலைமையிலேயே தான் பாடசாலை நடைபெற்றது. இப்படியாக பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது 17.07.1961ல் திருமதி பி.கந்தையா உத்தியோக பூர்வமான அதிபராக கடமையேற்றார். 31.07.1971ல் திருமதி பத்மாவதி பொன்னுத்துரை ஆசிரிய பயிற்சி பெறுவதற்காக ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இணைந்து கொண்டார். அவர் பயிற்சியை முடித்துவிட்டு மீண்டும் இதே பாடசாலைக்கு வந்து உதவி ஆசிரியையாக பல வருடங்கள் கடமையாற்றினார்.

அதிபராக கடமையேற்ற பி.கந்தையா அதிக நாள் நீடிக்கவில்லை. 02.06.1962ல் இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டார்.

அதன் பின்னர் 03.06.1962ல் அமரர் திரு.மு.வேலுப்பிள்ளை அதிபராக கடமையேற்றார். இவரின் காலத்திலேயே 1972ம் ஆண்டு புரட்டாதி 23ம் திகதி மட்/கல்லடி முகத்துவாரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை என மீண்டும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இப்படியாக படிப்படியாக பாடசாலை வளர்ச்சி அடைந்து கொண்டு வந்தது. பின்னர் 03.01.1968ல் திரு. மு.வேலுப் பிள்ளை இடமாற்றம் பெற்றுச் செல்ல, 04.01.1968ல் திருமதி தங்கப்பொன் நடராஜா அதிபராக பொறுப்பேற்று 7 மாதங்கள் பாடசாலையின் வளர்ச்சிக்கு உரமூட்டி 31.08.1968ல் இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டார். ஒவ்வொரு பாடசாலைத்தினத்திலும் அவரது ஞாபகார்த்தமாக அவருடைய பிள்ளை கள் அப்பாடசாலைக்கு வருகைதந்து அன்னையின் பணியை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

அதன்பின் மீண்டும் திரு மு.வேலுப்பிள்ளை 01.09.1968ல் அதிபராக கடமையேற்று 31.07.1971 வரை செவ்வனே பாடசாலையை சிறப்பாக நடத்தி வந்தார். இவரை மாணவர்கள்,பெற்றோர்கள் செல்லமாக **"பெரிய ஐயா"** என்றழைப்பது வழக்கமாக இருந்து வந்தது இன்றும் ஞாபகமாக உள்ளது.

அவரது காலத்தின் பின்னர் டி.எஸ்.கே.வணசிங்க 01.08.1971ல் அதிபராக கடமையேற்று சீரான அதிபராக சிறப்பாக கடமையாற்றி 8 மாதங்

களின் பின் 30.04.1972ல் இடமாற்றம் பெற்றுச் சென்றார்.


அவரைத் தொடர்ந்து வே. இரத்தினராசா 01.05.1972ல் அதிபராக கடமையேற்றார். இவரது பதவிக் காலம் கொஞ்சம் நீண்டதாகவும் பிரகாசமான தாகவும் இருந்தது. பாடசாலையின் விழாக்கள் பலவும் பெற்றோரின் ஆதரவுடனும் ஊரில் இருந்த **"நாமகள் காலாமன்றம்" "நாதன் இசைக்குழு"** வினரின் அனுசரணை, ஒத்துழைப் புடனும் பிரமாண்டமான முறைகளிலே நடந்தேறியது. அன்றைய காலங்களில் பாடசாலை விழாக்கள் பல இரவு வேளைகளிலேயே நடத்தப்பட்டது ஒரு சிறப்பம்சமாகும். அதற்கிடையிலே ஒலைக் கொட்டிலாக இருந்த பாடசாலை ஆரம்பத்திலேயே கல்லால் கட்டப்பட்டு விட்டது. அக்கட்டடம் இப்பொழுது பாரிய கட்டடங்களுக்கு நடுவே காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

13ம் திகதி புரட்டாதி மாதம் 1972ம் ஆண்டு 114மாணவர்களும், 5 ஆசிரியர்களும் கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். இப்படியாக 12 வருடங்கள் அமரர் வே.இரத்தினராசா எமது பாடசாலையில் கடமையாற்றி 30.04.1984ல் இடமாற்றம் பெற்றுச் சென்றார்.

அதன் பின்னர் 01.05.1984ல் திருமதி. ஆர்.வர்ணகுலசிங்கம் அதிபராக கடமையேற்று தனது பணி யினை சிறப்பான முறையில் செய்து வந்தார். இவரது காலத்தில் இவருக்கு உறுதுணையாக இருந்து செயற்பட்டு வந்தவர் திரு. தி.கமலராஜசர்மா ஆசிரியர். அதிபரின் வேலைகள் யாவற்றையும் தனது வேலையாக நினைத்து சிறந்த முறையில் செய்து முடிப்பார். இவரது சேவை எமது பாடசாலைக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது என்றால் மிகையாகாது. இவர் அதிபர் திரு வ.சொக்கலிங்கம் ஐயா அவர்களின் காலத்திலும் சிறப்பான முறையில் கடமையாற்றியவர். இவர் க.பொ.த(சா/த) பரீட்சை எழுதும் மாணவர்களை ஊக்குவிப்பதற்காக 1"D" எடுத்தால் 100/= வீதம் தருவேன். எடுக்கின்ற ஒவ்வொருவருக்கும் பணப்பரிசு தருவேன் என்று கூறுவார். அதுபோல் தனது சொந்தப்பணத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கு கொடுப்பார்.

திருமதி ஆர். வர்ண குலசிங்கத்தின் காலத்தில் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக 4 தொண்டர் ஆசிரியர்களையும் வைத்து கற்பித்தலில் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

1986ம் ஆண்டு வைகாசி மாதம் 14ம் திகதியன்றிலிருந்த நிலவரப் படி 267 மாணவர்களும் 7 ஆசிரியர் களும், 4 தொண்டர் ஆசிரியர்க ளும் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். இக்காலகட்டத்தில் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலா ளராகவும், பிரபல ஊடகவியலாளருமாக விருந்த அமரர் வி.சு.கதிர்காமத் தம்பிக்கு இப்பாடசாலைக்கு **"விபுலாநந்த**



மாணவர் தலைவர்கள்



K. Bharaneetharan
EDITOR
'JEEVANATHY'
KALAI AHAM
ALVAI (N.P.)

**வித்தியாலயம்"** என்று பெயர் சூட்ட வேண்டுமென்ற ஆசை இருந்தது. இதனை இவர் ஒவ்வொரு கூட்டத்திலும் பரிந்துரை செய்து இறுதியாக அவரது கோரிக்கை சகலராலும் ஏற்கப்பட்டு, 1986ம் ஆண்டு வைகாசி மாதம் 14ம் திகதியன்று **"மட்/கல்லடி முகத்து வாரம் விபுலாநந்த வித்தியாலயம்"** என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இவ்வேளையில் 04.08.1989ல் அதிபர் திருமதி ஆர்.வர்ணகுலசிங்கம் ஓய்வு பெற்றார். அவரது காலத்தில் திருமதி. சி.சௌந்தரராஜா பிரதி அதிபராக கடமையாற்றினார்.

அதன் பின் பிரதியதிபராக இருந்த திருமதி சி.சௌந்தரராஜா 04.08.1989 முதல் 25.01.1990 வரை அதிபராக பொறுப்பேற்று தனது கடமையை செவ்வனே செய்திருந்தார். அடுத்த அதிபர் யார்? யார்? என்ற கேள்விகள் எழுந்த பொழுது கல்லடி விநாயகர் வித்தியாலயத்தில் கடமை யாற்றும் வ.சொக்கலிங்கத்தின் பெயர் பரவலாக கதைக்கப்பட்டதன் காரணமாக அப்போது இருந்த பாடசாலை அபிவிருத் திச் சங்கத்தினராகிய நாங்கள் பல தடவைகள் கல்வித் திணைக்களத்திற்குச் சென்று அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடாத்தி, இறுதியில் 1990ம் ஆண்டு தை மாதம் 26ம் திகதி விபுலாநந்த வித்தியாலயத்தின் அதிபராக வ.சொக்கலிங்கம் ஐயா கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் எமது பாடசாலைக்கு வந்தது, எமது பாடசாலை வரலாற்றில் ஒரு மைல் கல் என்றே கூறவேண்டும். இவரது காலம் உண்மையில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய காலமாகும். இவரது காலத்தில் பாட சாலை துரிதமாக வளர்ச்சி கண்டது. எமது பாடசாலையின் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் பாடுபட்டு உழைத்தவர். ஆசிரியர் குழாமை அன்புடன் வரவ ழைத்து பாடசாலையின் உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் அயராது உழைத்து காட்டுப்பள்ளி என அழைக்கப்பட்டு வந்த இப்பாடசாலையை உயர்தர வகுப்பு வரை கொண்ட 1C பாடசாலையாக உயர வைத்த உத்தமரும் அவரே. அவர் வன்சொல் பேசாது இனிய சொல்லினால் ஆசிரியர் குழாமை அரவணைத்தது மட்டுமன்றி, மாணவர்களையும் ஏனைய ஊழியர்களையும், பெற்றோரை யும் அரவணைத்து ஒருமைப்பாடுடை யதாகவும், அமைதியான சூழ்நிலை கொண்டதாகவும், பல வளங்கள் கொண்ட பாடசாலையாகவும் மாற்றி மட்டு நகரில் உள்ள முன்னணிப் பாடசாலைகளுடன் பல நிகழ்வுகளில் போட்டி போட்டு வெற்றி பெறும் அளவிற்கு வளர்த்து விட்டவர். மாதம் தனது சம்பளப் பணத்தில் ஒரு தொகையை இப்பாடசாலையின் தேவை களை நிவர்த்திசெய்ய செலவு செய்து வந்தார். அதனால் தான் அவர் இன்றும் நல்ல பெயரோடும், புகழோடும் இருக்கின் றார்.

அகில இலங்கை ரீதியில் சிறந்த அதிபருக்கான விருது பெற்றதை நினைவு கூரும் போது விபுலாநந்த வித்தியாலயத்தாலும் சக ஆசிரியர்களாலும் தான் இந்தப் பேரும் புகழும் எனக்குக் கிடைத் தது என அடக்கமாக கூறுவார். நீண்ட காலமாக தொண்டர் ஆசிரியர்களாக இருந்து வந்த அமரர் கி.சற்குணானந்தன், திருமதி ந.கந்ததாஸ், திருமதி. ச.ஜெய மூர்த்தி, திருமதி வி.மகேஸ்பரராஜா ஆகியோர் வ.சொக்கலிங்கம் அதிபரின் முயற்சியாலும், அதற்கு முன்னர் இருந்த அதிபர்களின் ஒத்துழைப்பாலும் 01.04.1992ல் நிரந்தர மாக்கப்பட்டு இதே பாடசாலையில் தொடர்ந்து பணியாற்றவும் அனுமதிக்கப்பட்டனர்.

1992ம் ஆண்டு தரம் 1 தொடக்கம் தரம் 9 வரை வகுப்புக்கள் அதிகரிக்கப்பட்டன. அதே ஆண்டில் 496 மாணவர்களும் 18 ஆசிரியர்களும் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

1994ம் ஆண்டு மாணவர்கள் 560 ஆகவும், ஆசிரியர்கள் 24 ஆகவும் உயர்ச்சியடைந்து காணப்பட்டனர். இதே ஆண்டில் எமது பாடசாலை தரம் II பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டது.

கற்றல் கற்பித்தல் முறைகள் திருப்தியாக நடைபெற்று வந்த காரணத்தால் 1995ம் ஆண்டு 628 மாணவர்களும், 27 ஆசிரியர்களும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர். குறுகிய காலத்தில் துரித வளர்ச்சியை எமது பாடசாலை எட்டியதால் 1C தரப் பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டது.

அதிபர் வ.சொக்கலிங்கத்தின் சிறந்த முகாமைத்துவம் காரணமாகவும், கற்பித்தலில் அவர் காட்டிய தீவிரம் காரணமாகவும், தன்னலமற்ற சேவை காரணமாகவும் எமது பாடசாலை சகல துறைகளிலும் துரித முன்னேற்றம் கண்டதை கவனித்த கல்வித் திணைக்களம் சகல உதவிகளையும் செய்ய தயங்கவே இல்லை. குறிப்பாக வட-கிழக்கு மாகாண கல்விச் செயலாளராக கடமையாற்றிய க.தியாகராஜா எமது பாடசாலையில் விசேட கவனமெடுத்து சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கியமை குறிப்பிட்டாக வேண்டும். அவர் அதிபர் சொக்கலிங்கம் அவர்களுடன் கொண்டிருந்த நல்லுறவும் எமது பாடசாலைக்கு ஒரு காரணமாகும். 1997ம் ஆண்டு 777 மாணவர்களுடனும், 31 ஆசிரியர்களுடனும் சிறந்த முறையிலே பாடசாலை விளங்கியது. எமது பாடசாலைக்கு இலட்சினை ஒன்று தேவையென்று கண்டபொழுது அதனை வடிவமைத்து செப்பனிட்டுத் தந்தவர் அழகரட்னம் ஆவார். அவர் அத்தோடு மட்டும் நின்றுவிடவில்லை. பாடசாலை விழாக்களுக்கு தேவையான பதாதைகள், இல்லங்களுக்கான கொடிகள் போன்றவற்றையெல்லாம் கேட்கும் போதெல்லாம் மறுக்காமல், சினக்காமல் செய்து தருபவர்.

ஆண்டு 1998ல் 843 மாணவர்கள் 31 ஆசிரியர்கள்

ஆண்டு 2000ல் 970 மாணவர்கள் 34 ஆசிரியர்கள்

ஆண்டு 2001ல் 1026 மாணவர்கள் 39 ஆசிரியர்கள்

ஆண்டு 2002ல் 1074 மாணவர்கள் 41 ஆசிரியர்கள்

ஆண்டு 2003ல் 1079 மாணவர்கள் 38 ஆசிரியர்கள்

இப்படியாக எமது பாடசாலையின் வளர்ச்சி போய்க் கொண்டிருந்தது. பௌதீக வளங்கள் போதாமையினால் பாடசாலை நிர்வாகம் திண்டாடியது. அதிபர் அவர்களின் அயராத முயற்சியினால் தற்காலிக கொட்டில்கள் நிறுவப்பட்டன.

இவ்விடைப்பட்ட காலங்களிலே எமது பாடசாலையின் கல்வித்துறை மட்டுமல்ல விளையாட்டுத்துறையும் சிறப்படைந்தது. உடற்கல்வி ஆசிரியர் ஸ்ரீமுருகன் அவர்களால் எமது மாணவர்கள் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கரம், செஸ், மேசைப்பந்து போன்ற ககல விளையாட்டுக்களிலும் பயிற்றுவிக்கப்பட்டு வலய மட்டம், மாகாண மட்டங்களிலெல்லாம் சாதனை படைத்து தேசிய ரீதியிலும் பங்கு கொண்டுள்ளனர். அது மட்டுமல்ல பாண்ட் வாத்தியக் குழுவினரை நன்கு பயிற்றுவித்து நகர்ப்புற பாடசாலைகளினோடு போட்டியிட்டு பல தடவைகள் ஜெயித்து சம்பியன் பட்டங்களையும் வென்றுள்ளனர்.

இப்படியாக தன்னலம் கருதாத ஆசிரியர்கள் எமது பாடசாலையில் தொண்டாற்றியிருந்தமையினால் தான், எமது இந்த 50 வருட காலத்தில் எமது பாடசாலை ஒரு உச்சநிலைக்கு வர காரணமாயிருந்தது. இப்படியாக பல மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றும் நல்ல நிலையிலும் வாழ்வதற் கும் வழிவகுத்துத் தந்த அதிபர்களுக்கே இலக்க ணமாய் திகழ்ந்த சொக்கலிங்கம் ஐயா ஒய்வு பெறும் வரை எமது பாடசாலையிலேயே இருக்கவேண்டும் என்று கேட்டும், தவிர்க்கமுடியாத காரணங்களால் கல்வியில் பின்தங்கிய கரடியனாறு மாணவர்களுக்கு சேவை செய்யவென 30.08.2003ல் மட்/ கரடியனாறு மகா வித்தியாலயத்திற்கு மாற்றலாகிச் சென்றார்.

அதன் பின்னர் அதிபர் சொக்கலிங்கம் ஐயா அவர்களுடன் நீண்ட காலம் பிரதி அதிபராக் கடமையாற்றி வந்த அனுபவம் வாய்ந்த திருமதி வ.வேலாயுதபிள்ளை தொடர்ந்து அதிபராக கடமையாற்ற அனுமதியளிக்குமாறு கல்விப் பணிமனை அதிகாரிகளை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினராகிய நாங்கள் கேட்டுக் கொண்ட தற்கிணங்க அவர்கள் அனுமதியளித்தனர். அவரும் நல்ல நிலையில் பாடசாலையை நடாத்தி வந்தார். துரதிஸ்டவசமாக 26.12. 2004ல் ஏற்பட்ட இயற்கையின் சீற்றமான சுனாமி அனர்த்தத்தின் காரணமாக எமது பாடசாலை பிரதி அதிபரான திருமதி.சு. ஞானராஜா அவர்களையும், 54 மாணவச் செல்வங்களையும், பல பெற்றோர்களையும் இழந்தோம். இதன் காரணமாக பாடசா

லைக்கு வரவு குறைந்து காணப்பட்டது. இந்த அனர்த்தம் காரண மாக ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கு ஊர் மக்களுக்கும், மாணவர்களுக்கும், பாடசாலை சமூகத்திற்கும் சற்று தயக்கம் ஏற்பட்டது உண்மை தான். ஆனால் தன்னைச் சற்று சுதாகரித்துக் கொண்ட அதிபர் திருமதி. வ.வேலாயுத பிள்ளை தனது ஆசிரியர் குழாத்தின் உதவியுடன் கல்வித் தரத்தை உயர்த்தி, பாடசாலை யின் தரத்தையும் உயர்வடையச் செய்ததன் காரணமாக, மாணவர்களின் தொகையும், தற்போது திருப்திகரமான முறையிலே கூடி வருகின்றது. அதிபர் திருமதி வ.வேலாயுதபிள்ளை அவர்கள் கடும் எதிர்ப்புக்கள், சோதனைகள், வேதனைகள் ஏற்பட்ட போதெல்லாம் மனம் தளராது துணிவோடும், தைரியத் தோடும் வழி நடத்திக்கொண்டு வருகின் றார். சுனாமியின் பின்னர் இப் பாடசா லைக்கு தேவையான வளங்கள் போதிய ளவு கிடைத்துள்ளன. நிறுவனங் களின் உதவியுடன் பல மாடிக் கட்டடங்களும், மலசல கூடங்களும், சுற்று மதில்களும், பாடசாலைக்குத் தேவையான அறைக ளையும் கட்டுவித்துள்ளார்.

விளையாட்டு மைதானம் என்றவுடன் ஒரு ஞாபகம் இந்த மைதா னம் பாடசாலைக்கு கிடைப்பதற்கு காரணமாய் இருந்தவர்கள் அப்பொழுது கிராமசேவை உத்தியோகத்தராக இருந்த அமரர். க.ஞானசூரியம், அதன் பின்னர் கிராமசேவை உத்தியோகத்தராக இருந்த அமரர். மு.து.சௌந்தரராஜாவும் மைதா னத்திற்கு ஒதுக்கப்பட்ட காணியில் மக்கள் பலவந்தமாக குடியேறிய போதெல்லாம் அவர்களைத் தடுத்து நிறுத்தி மைதா னம் அமைய வழிவகுத்தனர்.

இந்த பொன்விழா ஆண்டிலே வைத்திய கலாநிதி சி.வேலாயுதபிள்ளை யின் சேவையையும் நாம் தட்டிப்பார்க்க வேண்டும். ஆம் அவர் எமது பாடசா லைக்காக, பாடசாலையின் வளர்ச்சிக் காக அயராது பாடுபட்டு வருபவர். பாடசாலை நேரத்தில் மாணவர் களுக்கோ, ஆசிரியர்களுக்கோ விபத்து நேர்ந்தாலோ, நோய் வாய்ப்பட்டாலோ கௌரவ டாக்டர் வேலாயுதபிள்ளை எந்த வித பிரதிபலனையும் எதிர்பாராமல் வைத்தியம் செய்து வருகின்றார். இன்று நேற்றல்ல. 1992ம் ஆண்டு தொடக்கம் இன்று வரைக்கும் எமது பாடசாலை விழாக்கள் யாவற்றுக்கும் வெளியிடப் படும் அறிக்கைப் புத்தகங்களுக்கு அட்டைப் படங்களை வடிவமைத்தும் தருபவர். எமது பாடசாலை இலட்சி னையை தேவைக்கேற்ப வரைந்து தருபவர். அவரது சேவைகளை பட்டியலி டுவது கட்டாயமானது.

எமது பாடசாலை நிகழ்வு களுக்கு எல்லாம் ஒரு குறிப்பிட்ட காலத் துக்கு முன்னர் ஆசிச் செய்தி வழங்கு வதற்கு திருச்செந்தூர் முருகன் ஆலய ஸ்தாபகர் ஓங்காரநந்தாஜி மகராஜும், கத்தோலிக்க பாதிரியார்களும் கலந்து கொள்வார்கள்.

அதிபர் சொக்கலிங்கத்தின் காலத்துக்கு பின்னர் மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிசன் சுவாமிகள் கூடுத




பிரதி அதிபர்

லாக அஜராத்மானந்தாஜி மகராஜ்ும் எமது பங்குத் தந்தை ஜோசப்மேரி அடிகளாரும் ஒவ்வொரு பாடசாலை நிகழ்வுக்கும் வருகை தந்து ஆசி வழங்குவார்கள். அவர்களின் ஆசியுடன் எமது பாடசாலை நன்கு வளர்ந்து செழிப்புற்று, பல மாணவ மாணவிகளை நல்ல நிலைமைக்கு ஒவ்வொரு வருடமும் தயாராக்கி வெளியேற்றிக் கொண்டிருக்கிறது. எமது விபுலாநந்த வித்தியாலயத்தின் 50 வருட காலத்தில் எத்தனையோ அதிபர்கள், எத்தனையோ ஆசிரியர்கள், எத்தனையோ மாணவ மாணவிகள் காட்டுப்பள்ளியில் தொடங்கி விபுலாநந்த வித்தியாலயம் வரையில் கற்றல் - கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டார்கள். எத்தனை மாணவர்கள் வைத்தியர்களாகவும், பொறியியலாளர்களாகவும், அதிபர்களாகவும், ஆசிரியர்களாகவும், இன்னும் பல விதமான உத்தியோகங்களிலும் இப்பாடசாலையில் படித்து வெளியேறி பயனடைந்துள்ளார்கள். வெளிநாடுகளிலும் நல்ல நிலையில் வாழ்கின்றார்கள். எது எப்படி இருந்தாலும் முதன்முதலில் எமது பாடசாலையிலிருந்து நேரடியாக பல்கலைக்கழகம் சென்ற மாணவி சகாயநாதன் டினோஜினி.

இவ்வாறாக இன்றைய நவீன யுகத்தில் கல்வி மற்றும் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளில் தடம் பதித்து வீறு நடைபோடுகிறது. கல்லடி முகத்துவாரம் விபுலாநந்தவித்தியாலயம்.

# இவ்வாண்டு (2010இல்) புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான விளக்க குறிப்புக்கள்


- ஆசிரியர்.யோ.இ.ஞானவரட்ணம் -

1. வயலை குத்தகைக்கு எடுத்துச் செல்பவன் - **முல்லைக்காரன்**
2. சூடு மிதிக்கும் எருதுகளை எவ்வாறு அழைப்பர் - **நடையன்**
3. அறுவடை செய்யப்பட்ட அருவக் கூறுகள் - **உப்பட்டி என அழைப்பர்.**
4. சூடு மிதித்தலின் போது எருதுகள் இணைக்கப்படும் நடுதடியை எவ்வாறு அழைப்பர் - **களக்கட்டை**
5. எருதுகளை விரட்டும் சிறுதடி - **கேட்டி எனப்படும்.**
6. வைக்கோலை எவ்வாறு அழைப்பர் - **பொலிக்கொடி.**
7. மேற்புறம் அகன்றும் கீழ்புறம் ஒடுங்கியுமுள்ள மண்வெட்டி - **நாட்டான்.**
8. தென்னை ஈர்க்கிலால் செய்யப்படும் மீன்பிடிப்பதற்கான கூடு - **சென்மீன்கூடு**
9. கிழக்குத்திசையிலிருந்து வீசும். காற்றை எவ்வாறு அழைப்பர் - **கெண்டல் காற்று.**
10. மேற்குத் திசையிலிருந்து வீசும் காற்றை எவ்வாறு அழைப்பர் - **கச்சான் காற்று.**
11. எள்ளில் இருந்து உற்பத்தி செய்யப்படும் பொருள் - **நல்லெண்ணெய்**
12. ஊறுகாய் செய்யப்பயன்படுவது - **தேசிக்காய்**
13. ஒளிச்சமிக்கை மூலம் தகவல் தருவது - **வெளிச்சவீடு.**
14. வேடுவர் பெரஹரா நடைபெறும் இடம் - **மகியங்கனை**
15. வேடுவரின் நடனம் - **கிரிஹெரங்க நடனம்**
16. மரத்தை பிளப்பதற்கு பயன்படுத்தும் பொறி - **ஆப்பு**
17. வீட்டில் மின்காந்தம் பயன்படுத்தப்படும் உபகரணம் - **மின்மணி**
18. இலங்கையின் புராதன நகரங்களில் ஒன்று - **அநுராதபுரம்**
19. அநுராதபுரத்திலுள்ள விகாரை எது? - **தூபராமயவிகாரை**
20. பொலநறுவையில் உள்ள விகாரை எது? - **கிரிவிகாரை**

# வினாப்பத்திரம் —01
# பகுதி —II ற்கான விடைகள்

1.கடலூர் கிராமம்
2.கால்நடை பண்ணை வளர்ப்பு
3.பச்சைக் கம்பளம் விரித்தால் போல
4.அருவிகள்
5.காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
6.மனவேதனைப்படுவர், ஈடுபடுவர்.
7. I. எழில் II. வயல்
III. நோய் IV.அனர்த்தம்
8. சிறுவர்கள் கரடு முரடான பாதை யினூடாக நடந்து சென்றனர்.
9. முகுந்தன் ஏழை எளியவர்களுக்கு வாரி வழங்குவான்.
10. கலீர் கலீர், டாங் டாங்
11. கமகம
12. 735cm
13. 5085g
14. 3650ml
15. 2550m
16. என்னுடைய மாமா ஒல்லியானவர்
17. அவன் கடுமையானவன், கறுப்பானவன்.
18. அவன் பாடசாலையில் இருக்கிறான்.
19. இது ஒரு கணினி
20. D,A ; C,A
21. C,B நகரினூடாகச் செல்வது
22. A,D
23. அலியா
24. விஸ்ஸாய்
25. வாழ்திய
26. தர
27. நுளம்பு உற்பத்தியைத்தடுக்க.
28. பேசும் போது உமிழ் நீர் சிந்துவ தால்.
29. இடப்பற்றாக் குறையாகும்.
30. மண்ணரிப்பு.
31. நீர்ச்சக்கரத்தின் வேகம் கூடுதல்.
32. 225/=
33. 350/=
34. 195/=
35. 6$\ell$ எண்ணெய்
36. பிஸ்கட்
37. 2
38. 3
39. அல்வா எடிசன்
40. பின்னவெல
41. தென்சிலுவை
42. கபிலம்
43. 12.5Kg
44. பாகற்காய்
45. புளியம் விதை
46. i. கனவுரு (சதுரமுகி) ii.8
iii.24 செங்கோணங்கள்
iv.64cm$^2$ / 64சதுரcm
47. பாடசாலை அபிவிருத்திச்சங்கம்
48. இலங்கை மின்சார சபை
49. 24cm
50. 3/6 = 0.5
51 2550$ml$
52. 225/=
53. 134 வருடங்கள்

# அல்சர்




வயிறு வலிக்கிறது என்றால் அதற்குப் பலவிதமான காரணங்கள் உண்டு. எல்லா வயிற்றுவலியும் ஒன்று தான் என்று நினைத்துவிடக் கூடாது. அதேபோல் சிகிச்சைகளும் விதவிதமா னவை

அதிகமாக உண்பதாலோ, வேகமாக உண்பதாலோ, உணர்ச்சிவ சப்படுவதாலோ வயிற்றுவலி வரலாம். உங்களுக்கு வரும் வயிற்றுவலி சாதா ரண வயிற்று கோளாறினால் ஏற்படுவது தானா, அல்லது வேறு ஏதேனும் கொடிய நோயா என்பதை அறிந்து கொள்ள சில விபரங்கள்:

**விஷ உணவு:**

உணவில் விஷம் கலந்து விடுமானால் மயக்கம், வாந்திபேதி, அடிவயிற்றில் பிடிப்பான வலி, சோர்வு ஆகியவை விஷம் கலந்த உணவை உண்ட ஒரு மணி நேரத்திற்குள்ளாக நிகழக்கூடும். சில சமயங்களில் ஓரிரு தினங்களுக்குப் பின்னரும் கூட இக்கோளாறு ஏற்படலாம். பக்டீரியா, வைரஸ் கிருமிகள் முதலியவை உணவில் கலந்துவிடுவதுதான் இதற்குக் காரணம்.

உணவை நன்றாக சுட வைத்து உண்ணவேண்டும். உணவை நன்கு மூடி வைக்கவேண்டும். உண் ணும் சமயம் வரை உணவை ஃபிரிட்ஜ் ஜில் வைத்திருப்பது நல்லது.

விஷக்கிருமி கலந்த உணவை உட்கொண்டு கோளாறு ஏற்படுமானால் மருத்துவரிடம் காட்டி **'ஆன்டிபயாடிக்'** உட்கொள்ளவேண்டும்.

**வாயுக் கோளாறு**

விலா மடிப்பில் திடீர் வலி. மாரடைப்போ என்று அச்சத்தை அளிக்கக் கூடிய வகை வலி இது. அடிவயிற்றில் வலி, குடல் பாதையில் வலி ஆகியவை வாயுக் கோளாறினால் நிகழக்கூடியவை. உண்ணும்போதும், பேசும்போதும் அதிகப்படியான காற்றை உட்கொள்வ தாலும் இத்தொல்லை ஏற்படுகிறது. உறிஞ்சி சாப்பிடும் உணவு வகைக ளைத் தவிர்ப்பது. உண்ட பின்பு சிகரெட்

பிடிப் பதைத் தவிர்ப்பது. காலி ஃப்ளவர்,பீன்ஸ் வெங்காயம் போன்ற வாயுப் பதார்த் தங்களைத் தவிர்ப்பது ஆகிய வற்றால் இத்தொல்லையிலிருந்து விடுபடலாம்.

இத்தகைய கோளாறு ஓரிரு வாரங்களுக்கும் மேலாக இருக்குமானாலோ, வலியுடன் ரத்தம் கலந்த வயிற்றுப் போக்கு ஏற்படுமானாலோ இது சாதாரண வயிற்றுக் கோளாறு அல்ல என்பதை உணர்ந்து மருத்துவரிடம் தீவிர சிகிச்சை பெறவேண்டும்.

## மார்பு எரிச்சல்

மார்பு எலும்புப் பகுதியில் எரிச்சல், மார்புப் பகுதியில் வலி, வாந்தி, வயிற்றுப்புரட்டல், மேல்வயிற்றுப் பகுதியில் பறப்பது போன்ற லேசான உணர்வு நாக்கில் பித்த உணர்வு ஆகியவை ஏற்படும்.

அதிக உணவு, அல்லது உண்ட உணவு உணவுக் குழாயிலிருந்து வயிற்றுக்குள் இறங்குவதில் பாதிப்பு, ஹெர்னியா எனப்படும் குடல் கோளாறு ஆகியவற்றால் இது ஏற்படலாம். அமிலத் தன்மை உண்டாக்கும் உணவு வகைகள், மது, சிலவகைப் பழங்கள் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும். மருத்துவரிடம் காணபித்து இது சாதாரண கோளாறா, இருதயக் கோளாறா, குடல் புண்ணினால் ஏற்படுவதா? என்பதை அறிந்து சிகிச்சை பெற வேண்டும்.



## அஜீரணம்

உணவு உண்டபின் மார்பு எரிச்சல், வாந்தி உணர்வு, வாயில் பித்த உணர்வு ஆகியவை ஏற்படும்.

அதிகமாகப் புகைப்பிடித்தல், மது ஆகியவற்றைத் தவிர்க்கவேண்டும். நிதானமாக தேவையான அளவே உட்கொள்ள வேண்டும். மதுவுடன் குளிர் பானம், ஆஸ்பிரின் போன்றவை கலந்து உட்கொள்வதை அறவே தவிர்க்க வேண்டும். மருத்துவரிடம் காட்டி சிகிச்சை பெறவேண்டும்.

## குடலில் ஃப்ளூ

வாந்தி, காய்ச்சல், குளிர், குடலில் பிடிப்பு போன்ற உணர்வு, சோர்வு ஆகியவை. இதனால் தோன்றும். இக்கோளாறு ஒரு நாள் முழுவதும் இருக்கும்.

-தொடரும்




ஆண், பெண் இருபாலாருக்கும்
சகலவிதமான சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படும்
வீதி ஒழுங்கு மற்றும் இயந்திரவியல் பற்றிய பாடங்கள்
தரமான ஆசிரியர்கள் மூலம் ஒழுங்கு முறையில்
இலவசமாகக் கற்றுக்கொடுக்கப்படும்.



**VEHICLE HIRE**
திருமண வைபவங்களுக்கு
கார் மற்றும்
சொகுசு பஸ் வழங்கப்படும்

# IYNGARAN LEARNERS

**No. 61, Station Cross Road,**
**Batticaloa.**
**Tel : 060-265 0608**
**Mobile : 077 313 8372**

# மட்டுநகரில் சிறந்ததோர் உணவகம்

# நளபாகம் உணவகம்!

## சாப்பாட்டு வகைகள்

- Fried Rice
- புரியாணி
- தோசை
- நூடுல்ஸ்
- இட்லி
- பிட்டு
- இடியப்பம்
- பூரி
- சிற்றுண்டிகள்
- குளிர்பானங்கள்
- ஐஸ்கிறீம்
- கொத்துரொட்டி
- முட்டை ரொட்டி
- பறோட்டா
- சப்பாத்தி

மற்றும் இறால், கணவாய், நண்டு நெத்தலி போன்ற Bites வகைகள் சூடாகவும், சுவையாகவும் கிடைக்கும். அத்தோடு அனைத்து வைபவங்களுக்கும் ஏற்ற ஓடர்களை குறித்த நேரத்தில் பெற்றுக் கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்.

## நளபாகம் உணவகம்

28, லொயிட்ஸ் அவனியு
மட்டக்களப்பு.

தொ.பே: 065-4900037 065-2227623

Graphics Plus @ Batti

வணசிங்கா அச்சகம், 126/1, திருமலை வீதி, மட்டக்களப்பு